# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 24 திங்கட்கிழமை [09-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 219


## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிரிட்டன் - நோர்வே கூட்டாக முயற்சி

### அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பு

கொழும்பு, ஒக. 9

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த பிரிட்டனும் நோர்வேயும் கூட்டாக முன்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இது விடயமாக அந்த நாடுகள் இலங்கை அரசின் உயர் மட்டத்துடனும் —

லண்டனில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஷெல் தாக்குதல் தொடர்கிறது

வவுனியா, ஒக. 9

இராணுவக்கட்டுப்பாடற்ற பாண்டியன்குளம் பகுதிமீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக பொது மக்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 26ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)



நிவாரணத்தை வெட்டுவதும் மீளாய்வதும்இவையின்ர கைவந்த கலை பாருங்கோ...!

## வவுனியாவில் பாதுகாப்பு அதிகரிப்பு!

### தாக்குதல்களை அடுத்து

வவுனியா, ஓகஸ்ட் 9

வவுனியா நகரப் பகுதியில் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றிவளைப்புத் தேடுதல்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

வவுனியா — மன்னார் வீதியில் கடந்த வாரம் இரு இடங்களில் இராணுவ வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை —

(10ஆம் பக்கம் பார்க்க)

## பவுஸர் மீது தாக்குதல்: சாரதி காயம் அடைந்தார்!

வவுனியா, ஒக. 9

மன்னார் இரணை இலுப்பைக்குளம் பகுதியில் நேற்றுக் காலை 11 மணியளவில் படையினரின் பவுஸர் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று வவுனியாவில் படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் அந்தப் பவுஸரின் சாரதி காயம் அடைந்தார். அவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். (இ-3-164)

### இரு படையினர் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புப் பாலத்தடியில் அமைந்துள்ள இராணுவ முகாம் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

இந்தத் தாக்குதலில் இரு படையினர் காயம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

### கோடிகாமத்தில் குண்டு மீட்பு

கொழும்பு, ஒக. 9

யாழ். மாவட்டத்தில் கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் படையினர் நடத்திய தேடுதலில் இரு ஹெல்மெட்டுக்களும், ஒரு 120 மி. மீ.மோட்டார் குண்டும் கைப்பற்றப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

பரந்தனுக்கு கிழக்கே படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது படையினரின் சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பிரார்த்தனை முடிவடைந்தது

யாழ்ப்பாணம், ஒக. 9

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்க இறை ஆசி வேண்டி ஒருவார காலமாக யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டு வந்த சர்வமதப் பிரார்த்தனை நேற்றுடன் முடிவடைந்தது.

நேற்றைய இறுதிநாள் பிரார்த்தனையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி கௌரவ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். ஆயர் இல்லத்தைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் ஊடான பாதை இன்று திறக்கப்படுகின்றது

### இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு 500 பேர் செல்வர்

வவுனியா, ஒக. 9

வன்னியில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கும் இடையே யாழ்ப்பாணம் — கண்டி வீதியில் "ஏ 9" பாதையில் மாங்குளம் ஊடான பாதை இன்று திறக்கப்படவுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 29 ஆந் திகதி முதல் தடைப்பட்டிருந்த போக்குவரத்து இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வந்த கடிதப் பரிமாற்றங்களில் இணக்கம் ஏற்பட்டதை அடுத்து பாதை திறக்கப்படுவதாகவும்—

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் 12 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் இன்று எடுத்துச் செல்லப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து வரும் லொறிகள் படையினரின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் மீள வழங்குவது குறித்து அமைச்சரவை இந்த வாரம் ஆராயும்

கொழும்பு, ஒக. 6

குடாநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை மீள வழங்குவது தொடர்பாக இந்த வாரம் அமைச்சரவையில் ஆராயப்படவிருப்பதாக தெரியவந்தது.

குடாநாட்டில் உலர் உணவு நிவாரணம் பெற்று வரும் 90 ஆயிரம் குடும்பங்களுக்கான நிவாரணத்தை நிறுத்திச் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் உதவி வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகே ஜனாதிபதியுடன் பேசியிருந்தார்.

நிவாரணத்தை மீண்டும் வழங்க ஜனாதிபதி கொள்கை அளவில் இணங்கியிருந்தார்.

இது தொடர்பாக ஒபடகே அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த வாரம் அமைச்சரவை கூடும்போது இந்த அறிக்கை ஆராயப்படும் என்றும் —

பெரும்பாலும் மீண்டும் நிவாரணம் வழங்க உத்தரவு வழங்கப்படலாம் என்றும் — செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

### இனப்பிரச்சினை குறித்து

## ஆஸி. அதிகாரிகளுடன் வன்னி ஆயர் பேச்சு

கன்பரா, ஒக. 9

வன்னி மக்களின் அவல நிலை, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகியன தொடர்பாக மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசெப் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு ஆயர் மேற்கொண்டுள்ள விஜயத்தில் நேற்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பல மணி நேரம் கலந்துரையாடினார் என்றும் —

வன்னியில் மக்கள் படும் அவலம், மடுத்தேவாலய நிலைமை, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகியன தொடர்பாக ஆயர் விளக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயரும் ஆயருடன் சென்றுள்ள தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த ஜோ. வில்லியமும் இன்று கன்பராவில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழிமுறை என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தவிருக்கின்றனர். அடுத்த வாரம் இவர்கள் நியூசிலாந்துக்கு செல்வர், (இ-3)

## மன்னார் - இலுப்பைக்கடவை நிரந்தரமான படகுச் சேவை

### அரச அதிபர் கோரிக்கை

மன்னாருக்கும்- இலுப்பைக் கடவைக்கும் இடையில் நிரந்தர படகுச் சேவை ஒன்றை நடத்த அனுமதிவழங்கவேண்டும் என்று மன்னார் அரச அதிபர் எஸ். எம் குறூஸ் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

மன்னார் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற அவர்கள் மன்னார் செயலகத்துக்கே வரவேண்டும்என்றும்-

அவர்கள் தற்போது திறக்கப்பட்டுள்ள தரை வழிப் பாதை ஊடாக வருவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும்—

எனவே மன்னாருக்கும் — இலுப்பைக்கடவைக்கும் இடையில் போக்குவரத்துக்கு படகுச்சேவை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்—மன்னார் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (164-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர்
திரு. கு. சண்முகநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி குமாரசாமி சரஸ்வதி

அவர்கள் சிவபதமெய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(68076)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திரு. கு. சண்முகநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி குமாரசாமி சரஸ்வதி

அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்திஅடையப் பிரார்த்திப்பதோடு எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(68078)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குமாரசாமி சரஸ்வதி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவாஸ் கிறீம் ஹவுஸ் உரிமையாளரான திருமதி குமாரசாமி சரஸ்வதி 8-8-99 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் சண்முகநாதன் (அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), செந்தில்மணி, சிவசுப்பிரமணியம் (சிவாஸ் கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-8-99) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

இராமகிருஷ்ண பவனம்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(68071)

## செல்லத்துரை பரராஜசிங்கம்

(சமூகசேவைத் திணைக்களம், கொழும்பு)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுண்டிக்குளியை வதிவிடமாகக் கொண்டவருமான செல்லத்துரை பரராஜசிங்கம் அவர்கள் 07-08-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
தர்மகுலசிங்கம் (விஜயன்)
(சகோதரன்)
74, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

16/1A, Chalemond,
Wellawatta-
Tel. No. 508001

(68073)

## திருமதி குமாரலிங்கம் நாகம்மா

கச்சாய் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட 14-07-99 இல் காலஞ்சென்ற குமாரலிங்கம் (சதாசிவம்) அவர்களின் அன்பு மனைவி நாகம்மா அவர்கள் 8-8-99 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா — தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் பூபாலசிங்கம் (அதிபர் யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை, தலைவர், கமநல சேவைக் கேந்திர நிலையம், புத்தூர்), சண்முகநாதன் (கொழும்பு), புஸ்பபூபதி, புஸ்பதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை, அச்சுவேலி), தம்பிராசா (ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்களம்), மகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஷ்ணுகுமாரி (யாழ். பல்கலைக்கழகம், நுண்கலைப்பீடம்). விஷ்ணுசிறி (யாழ். உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்), சுலேகா (கொழும்பு), மீரா (கொழும்பு), துவிவர்ணன் (கொழும்பு), றஜனி (உயர்தர வகுப்பு மாணவி. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), வைகுந்தவாசன் (மாணவன், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8-8-99 ஞாயிற்றுக்கிழமை கொடிகாமத்தில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவித்தாள் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
கு. பூபாலசிங்கம்
(மகன்)

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(68057)

# சமூக உளமேம்பாட்டு சுற்றுலா

வலி. தென்மேற்கு ஓக. 9

யாழ். சுகவாழ்வு நிலையத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற 'சமூக உளமேம்பாட்டு சுற்றுலா'வில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பங்குபற்றி தமது ஆளுமைகளை வெளிப்படுத்தினர்.

நவாலி – சண்டிலிப்பாய் – மல்லாகம் ஆகிய சுகவாழ்வு நிலையங்களைச் சேர்ந்த-200 பேர் அண்மையில் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில், பருத்தித்துறை துறைமுகம் மற்றும் செல்வச் சந்நிதி ஆலயங்களுக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டை உளவளத்துணையாளர்களான வி. ஜே. ஆரியரட்ணா, என். நவரட்ணராஜா ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

(ஐ – 185)

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

A/L 2001

கணக்கீடு

பிரிவு I
கணக்கீட்டுச் சமன்பாடு
09 – 08 – 99 4-00 p.m.

பிரிவு II
தனிவியாபார முடிவுகணக்கு
10 – 08 – 99 4-00 p.m.

ஆசிரியர்: திரு. சி. தவா

(68075)

## NEW SCIENCE COLLEGE

JAFFNA.

பௌதிகவியல்
A/L 2001
பொறியியல்
( நிலையியல் )

ஆரம்பம்: 11-08-99 (புதன்)
காலை 7-00 மணி

by: M. கருணாநிதி
B. Sc.

(68070)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று முதல்
பிரபு, ராதிகா,
முரளி, சித்திரா,
கவுண்டமணி, செந்தில்.
நடித்த
நினைவுச் சின்னம்

நேரம்; 10-30, 2-30

(சி/8469)

## ராஜா

யாழ்ப்பாணம்

அர்ஜுன் - ரஞ்சிதா
மற்றும் பலர் நடித்த

ஜெய்ஹிந்த்

10-30, 2-30

(சி/8419)

## நாகம்ஸ்

சுன்னாகம்

கார்த்திக், நக்மா,
கவுண்டமணி,
ஜெமினிகணேசன்
மணிவண்ணன் நடித்த

மேட்டுக்குடி

காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]

(68047)

# தெல்லிப்பழையில் புதிய குடும்ப விவரப் பட்டியல்

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அளவெட்டிப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கான புதிய குடும்ப விவரப் பட்டியல்களைத் தயாரிக்கும் பணியில் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னர் நடைமுறையிலிருந்த குடும்ப விவரப் பட்டியல்கள் இரத்துச் செய்யப்பட்டு, தற்சமயம் புதிய படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய புதிய படிவங்களில் குடும்பப் புகைப் படங்களும் ஒட்டப்பட்டு, பார்வைக்கு வைக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஐ-13)

# மட்டுவில் வடக்குக்கு மின் வழங்கப்படவில்லை

சாவகச்சேரி, ஓக. 9

சாவகச்சேரியில் மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாததால் அப்பகுதி பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் பகுதியில் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டுள்ள இடத்தில் இருந்து சுமார் அரை மைல் தொலைவுக்குள் அமைந்துள்ள இப்பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ள மட்டுவில் தெற்கு, நுணாவில் பகுதிகளுக்கு இந்த ஜெனரேட்டரில் இருந்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகபொது மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

(ஐ-31)

# மலேரியா நுளம்பு ஒழிப்பு மருந்து வந்தது

திருநெல்வேலி, ஓக. 9

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பிலுள்ள மலேரியா தடுப்பு இயக்கத்தின் தலைமை அலுவலகம் 25 பெட்டி பனிற்றோதியன் [Fenitrothion] என்னும் நவீனரக நுளம்புக்கொல்லி மருந்தினை அனுப்பிவைத்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மலேரியா நோய் தொற்றியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ள இடங்களுக்கு விசிறுவதற்காக இம் மருந்து பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளதாக சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-235)

# மகாயாகம் இறுதி நாள்

யாழ்ப்பாணம், ஓக.9

தமிழ் மக்களின் இன்னல்கள் நீங்கி உலகில் சமாதானம், மகிழ்ச்சி என்பன நிலவவேண்டி யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் நல்லூர் சிவன் கோயிலில் நடைபெறும் ஸ்ரீ சிவ மஹாயாகத்தின் இறுதி நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

காலை 7 மணிக்கு ஸ்ரீ ருத்ர ஹோமமும் 10. 30 மணிக்கு 108 கலச சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு விசேட பூஜை, உள்வீதி உற்சவம் என்பன இடம்பெறும்.

நேற்றுக்காலை முதல்நாள் நிகழ்வுகள் இடம் பெற்றன.

(ஐ-க)

# வாழ்த்துகின்றோம்

அண்மையில் சமாதான நீதிவானாகப் பதவியேற்ற
திருவாளர்
**சபாரத்தினம் சற்குணசிங்கம்** அவர்களை
(இளைப்பாறிய பிராந்திய பொறியியல் உதவியாளர், செயலாளர், தென் இந்திய திருச்சபை, சாவகச்சேரி செயலாளர், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், சாவகச்சேரி)
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தென் இந்திய திருச்சபை, சாவகச்சேரி
கிறிஸ்தவ வாலிபர் சங்கம், சாவகச்சேரி.
(Y. M. C. A.)

(சி/8470)

# புலமைப் பரிசில் வினாத்தாள் - 1999

(கணனிப் பதிப்பு)

நேற்று நடைபெற்ற அரச புலமைப்பரிசில் வினாத்தாள்களை கீழ்வரும் இடங்களில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
- நாவலர் கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.
- I. B S. கல்வி நிறுவனம், சுண்டுக்குளி.
- ஆனந்தா புத்தகசாலை, நல்லூர்.
- அறிவொளி கல்வி நிலையம், நல்லூர்,
- வள்ளுவர் அக்கடமி, உரும்பிராய்.
- கலைவாணி கல்வி நிலையம், கோப்பாய்.
- ஐடியல் கல்வி நிலையம், நீர்வேலி.
- குகன் கல்வி நிலையம், ஆவரங்கால்.
- லக்கி கல்வி நிலையம், அச்சுவேலி.
- மொடேண் புத்தகசாலை, நெல்லியடி.
- ஆசீர்வாதம் புத்தகசாலை, சாவகச்சேரி.
- கோகிலா புத்தக நிலையம். கொடிகாமம்.

(68074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாரத்துக்கு வரும் தலைவர்களை இலக்குவைத்து தற்கொலைப் படை?

## கோவையில் பொலீஸ் கண்காணிப்பு தீவிரம்

கோவை, ஓக. 9

தேர்தல் பிரசாரத்துக்காக கோவைக்கு வருகைதரவுள்ள அரசியல் பிரமுகர்களைக் கொலை செய்வதற்காக தற்கொலைப் படையினர் அங்கு ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்து பொலீஸ் கண்காணிப்பு அங்கு தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது.

ஈழப் போராளிகளின் கொலைப் பட்டியலில் உள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பட்டியலில் உள்ள முதல்வர் கருணாநிதி மற்றும் முக்கிய பா.ஜ.க தலைவர்கள் ஆகியோர் இம் மாத இறுதியிலும், அடுத்த மாதத் தொடக்கத்திலும் கோவை வரத் திட்டமிட்டுள்ளனர்.

சோனியா, ஜெயலலிதா ஆகியோர் மேட்டுப்பாளையம் பகுதியில் ஒரே மேடையில் பிரசாரம் மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொலைப் பட்டியலில் உள்ள தலைவர்களைத் தாக்க இலங்கையைச் சேர்ந்த 5 பெண் மனித வெடிகுண்டுகள் [ தற்கொலைப் படையினர் ] தமிழகத்துக்குள் ஊடுருவியுள்ளதாக நுண்ணறிவுப் பிரிவுத் தகவல்கள் எச்சரித்துள்ளன. நிரஞ்சனா என்பவரின் தலைமையில் இக் கும்பல் உள்ளே நுழைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் வாக்குப் பதிவுக்குச் சில தினங்களுக்கு முன்னர் 1998 ஆம் ஆண்டில் பெப்ரவரி 14 ஆம் திகதி ஆர். எஸ், புரத்தில் பா. ஜ. க. தலைவர் அத்வானிக்குக் குறி வைக்கப்பட்டது,

அத்வானி வந்த விமானம் தாமதமாகக் கோவை வந்ததால் அவர் உயிர் தப்பினார். எனினும் நகரின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 60-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

கோவையில் நடைபெற்ற கோரச் சம்பவங்களுக்கு வெடிகுண்டு தயாரித்து விநியோகம் செய்த அல்– உம்மா தீவிரவாதிகள் ஜாகீர் உசேன், டைர்மூசா, டெய்லர் ராஜா ஆகியோர் காவல் துறையினரிடம் இன்னமும் பிடிபடாமல் இருப்பதும் காவல் துறையினரை அதிவிழிப்புடன் இருக்கச் செய்துள்ளது.

கோவை மற்றும் சுற்றுப் பகுதிகளில் செப்ரெம்பர் 11 ஆம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் தலா 4 ஆயிரம் காவலர்களைப் பணியில் அமர்த்தத் திட்டமிடப்பட்டு வருகிறது. இதில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, மத்திய ரிசேர்வ் காவல்படை (சி.ஆர்.பி-எப்), அதிரடிப்படை (எஸ்.டி.எப்), அதிவிரைவுப் படை (எஸ்.ஏ.எப்) ஆகியவையும் அடக்கம்.

கோவை மட்டுமல்லாது போத்தனூர், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலை, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களையும் தீவிர கண்காணிப்பு இடங்கள் பட்டியலில் காவல் துறையினர் சேர்த்துள்ளனர். (ஐ)

## சக்கரம் சின்னம் எவருக்கும் இல்லை

புதுடில்லி, ஓக. 9

'சக்கரம்' சின்னம் தமக்கே ஒதுக்கப்படவேண்டும் என்று ஜனதா தளத்தின் இரு அணிகளும் இழுபறிப்பட்டதைத் தொடர்ந்து அந்த சின்னத்தை எவருக்கும் வழங்குவதில்லை என்று தேர்தல் ஆணையகம் முடிவு செய்துள்ளது.

ஜனதா தளத்தில் அண்மையில் ஏற்பட்ட பிளவை அடுத்து முன்னாள் பிரதமர் தேவகௌடா தலைமையில் ஓர் அணியும், சரத்யாதவ் தலைமையில் ஓர் அணியுமாக அக்கட்சி இரண்டு பட்டது தெரிந்ததே.

இந்த இரு அணிகளும் புதிய பெயர்களில், புதிய சின்னங்களில் போட்டியிட முடியும் என்றும் —

இரு அணிகளையுமே தேசியக் கட்சிகளாக தற்காலிகமாக அங்கீகரிப்பது என்றும்—

கட்சியின் முன்னைய சின்னமான சக்கரம் சின்னத்தை எவருக்கும் வழங்காமல் முடக்கி வைப்பது என்றும்—

தேர்தல் ஆணையகம் முடிவு செய்துள்ளது. [ஐ-ஈ]



பிரதமர் வாஜ்பாய்

# தனித்து 200 இடங்களில் பாரதீய ஜனதா வெல்லும்?

## 'மீடியா' ஆய்வு மையம் கருத்துக் கணிப்பு

புதுடில்லி, ஓக. 9

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி தனித்து 200 இடங்களில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் தனிப் பெரும் கட்சியாக விளங்கும்.

'மீடியா' ஆய்வு மையம் என்ற அமைப்பு 16 மாநிலங்களில் 71 நாடாளுமன்றத் தொகுதிகளில் நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரிய வந்துள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பின் முடிவுகளை 'அவுட்லுக்' சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:–

பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் நேசப ஜனநாயகக் கூட்டணியும் இணைந்து 279 முதல் 289 தொகுதிகளைக் கைப்பற்றும்.

காங்கிரஸும் அதன் கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்து 152 முதல் 162 தொகுதிகளைக் கைப்பற்றும்.

நான்கு இடதுசாரிக் கட்சிகள் சமாஜவாதிக் கட்சி, தமிழ் மாநிலக் காங்கிரஸ், பகுஜன சமாஜம் மற்றும் அசோம் கணப் பரிஷத் கட்சிகள் அடங்கிய மூன்றாவது அணி 63 முதல் 68 தொகுதிகளைக் கைப்பற்றும்.

தெலுங்கு தேசம், தேசியவாதக்காங்கிரஸ் மற்றும் இதர கட்சிகளும் 34 முதல் 39 தொகுதிகளில் வெற்றி பெறும்.

பா ஜ. க-வுக்கு 27 5. சதவீத வாக்குகளும் (கடந்த தேர்தலை, விட 2 சதவீதம் கூடுதல்) காங்கிரஸுக்கு 23. 85 சதவீத வாக்குகளும் (கடந்த தேர்தலை விட 2 சதவீதம் குறைவு) பதிவாகும்.

பா ஜ. க கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாக 39 15 சதவீத வாக்குகளும், (கடந்த தேர்தலில் 37 2 சதவீத வாக்குகள் பதிவாயின). காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாக 37. 2 சதவீத வாக்குகளும் மூன்றாவது அணிக்கு ஆதரவாக 17. 53 சதவீத வாக்குகளும் பதிவாகும். (கடந்த தேர்தலில் இக் கூட்டணிக்கு 21. 93 சதவீத வாக்குகள் கிடைத்தன).

## வர்மா கமிசன் பாதுகாப்பு ஏற்பாடு

பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது நாட்டின் தலைவர்கள் மற்றும்முக்கியபிரமுகர்களைப் பாதுகாப்பதற்கு வர்மா கமிசன் சில யோசனைகளை முன்வைத்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த இக் கமிசன் தெரிவித்த யோசனைகளில் மேடைகளைச்சுற்றி இருக்கவேண்டிய காலியான இடம் மற்றும் தலைவர்களுக்கு மாலை, சால்வை என்பவற்றை அணிவிப்போர் விவரம், தலைவர்களுடன் கூடச் செல்வோர் தொடர்பான விவரங்களை முன்கூட்டியே பட்டியலிட்டு பொலீஸாருக்குத் தெரிவித்தல் ஆகிய யோசனைகளும் அடங்கும்.

**இந்திய தேர்தல் களம்**

கூட்டம் நடைபெறும் இடம் காலம் போன்ற விவரங்களை முன் கூட்டியே நேர காலத்துடன் வெளியிடுவதைத் தவிர்த்து குறுகிய கால அறிவித்தலுடன் நடத்த கட்சிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலில் பிரியங்கா போட்டியிடுவாரா?

### அவர் இப்போது லண்டனில்

லண்டன், ஓக. 9

சோனியா காந்தியின் மகள் பிரியங்கா வதேரா எதிர் வரும் தேர்தலில் போட்டியிடுவாரா என்ற கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால் அவர் தியானப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக லண்டன் சென்றுள்ளார்.

குரு எஸ். என். கோயங்கா லண்டனில் பிரியங்காவுக்கு தியானப் பயிற்சி அளித்து வருகிறார்.

பிரியங்கா நாட்டில் இல்லாதபோதும் கட்சி வேட்பாளராக அவரது பெயரையும் அறிவிப்பதற்கான பணியில் சோனியா ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

பிரியங்கா அரசியலில் ஈடுபட விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கவுள்ள சமயத்தில் அவர் லண்டன் சென்றிருப்பது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தி உள்ளது. [ஐ-8]

## மாறனை துணைப் பிரதமராக்க கருணாநிதி முயற்சித்தார்!

### ஜெயலலிதா குற்றச்சாட்டு



மயிலாடுதுறை, ஓக. 9

பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் முரசொலி மாறனைதுணைப்பிரதமராக்ககருணாநிதி முயற்சித்ததாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

மயிலாடுதுறையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அ.தி.மு.கவின் ஆதரவுடன் ஆட்சியமைத்த பாரதீய ஜனதாக் கட்சி கருணாநிதியுடன் சேர்ந்து கொண்டு தி.மு.க. அரசைக் காப்பாற்றுவதிலேயே ஈடுபட்டது. தமிழ்நாட்டின் நலன் குறித்து நாம் சொல்லியவற்றையெல்லாம் புறக்கணித்தார்கள். பதவியில் இருக்கும் கருணாநிதி கடந்த மூன்று ஆண்டுகளாக என்னைத் தூற்றவும், பழிவாங்கவும் செயற்பட்டாரே தவிர மக்களுக்காக எதையும் செய்யவில்லை — என்றும் ஜெயலலிதா அங்கு தெரிவித்தார். [ஐ-8]

## வாஜ்பாய் லக்னோவில் போட்டி

புதுடில்லி, ஓக. 9

நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதல் வேட்பாளர் பட்டியலை பாரதீய ஜனதாக் கட்சி கடந்த செவ்வாயன்று வெளியிட்டது.

பிரதமர் வாஜ்பாய் உத்தரப்பிரதேச மாநிலத்தின் லக்னோ தொகுதியிலும் உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி குஜராத் மாநிலம் காந்தி நகரிலும் போட்டியிடுகின்றனர். (ஐ)

## தலித் எழில்மலை புறக்கணிக்கப்பட்டாரா?

சென்னை, ஓக. 9

மத்திய அமைச்சரும் பாட்டாளி மக்கள் கட்சி பொதுச் செயலாளருமான தலித் எழில்மலை இத்தேர்தலில் போட்டியிடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த தேர்தலில் சிதம்பரம் [தனி] தொகுதியில் 7,955 வாக்குகள் வித்தியாசத்தில் தலித் எழில் மலை வெற்றி பெற்றார்.

மத்திய அமைச்சரவையிலும் இடம்பெற்ற தலித் எழில்மலையின் பெயர்பா.ம.கவின் முதல் பட்டியலில் இல்லை. இனிவரும் பட்டியலில் இடம்பெறுமா என்பதும் சந்தேகமே.

வேட்பாளர்கள் அறிவிக்கப்படாத மயிலாடுதுறை, வந்தவாசி, புதுவை, வேலூர் ஆகிய 4 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டு விட்டனர்.

ராசிபுரம் தனித் தொகுதி ( 9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள கடைப்பாவனைக்குரிய இரண்டு கண்ணாடி அலுமாரிகள்விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. தயாபரன், கே.கே.எஸ்.வீதி. கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(68056)

### மணமகள் தேவை

30 வயது பட்டதாரிக்கும் செவ்வாய்க் குற்றமுள்ள மின் பொறியியலாளருக்கும், 37 வயது கிளார்க்குக்கும் மணப்பெண்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை9–மாலை 2 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.வராகி திருமண சேவை, இல. 132, பருத்தித்துறை வீதி, 3 ஆம் கட்டையடி, கல்வியங்காடு.
(68045)

### [O/L] 99 கணிதம்

உங்கள் வீடுகளுக்கு வந்து தரம் 6 தொடக்கம்O/L வரையுள்ள மாணவர்கட்கு கணிதம் கற்பிக்கப்படும்- 1 மணித்தியாலத்திற்கு 75/-. பெற்றோர் தொடர்பு: சங்கர் 501 A,மொகடீன் பள்ளிவீதி, ஐந்து சந்தி, யாழ்நகர்.
(67981)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். இடம்பெயர்வின்போது யாழ்ப்பாணத்தில் நடந்ததைக் கூறுகின்ற ஒரே ஒரு நூல். வாசித்துவிட்டு உங்கள் உறவினர்களுக்கும் அனுப்புங்கள். அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது. ரூபா-50.
(68044)

### இசைக்கருவிகள்

புதிய தரமான றிபிள் ஃபொங்கோறம் இசைக்குழு மற்றும் தேவசபைகளுக்கு ஏற்றது. Casio M. T. 68 Organ, Victory 4 பான்ட், ரேடியோ கசற் விற்பனைக்கு உண்டு. எ. அருள்நாதன், பத்திரகாளி பின் ஒழுங்கை. சுழிபுரம்.
(68049)

### A/L MATHS 2001

பிரத்தியேக வகுப்புகள் 12 – 08 - 99 (வியாழன்) தொடக்கம் தினசரி மாலை 7 மணிக்கு நடைபெற உள்ளன. புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாகக் கற்பித்தல் நடைபெறும். தொடர்புக்கு: ஆசிரியர் N. A சயனன் (BSc), 60/1 வளாக வீதி, திருநெல்வேலி
(68060)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்சப்பயில ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி Cer/Dip in Science London 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள்வீதி (பிளாக்வீதி), சங்கானை. (68063)

## மருந்தகம் புனரமைப்பு

நெல்லியடி, ஒக. 9

வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் மத்திய மருந்தகம் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்புனரமைப்பு வேலைகள், வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, குடி தண்ணீர் தாங்கி ஆகியன திருத்தப்பட்டு வருகின்றன.

[ஐ–109]

---

கூவில்

## தீபஜோதி ச. ச. நிலைய வெள்ளிவிழா -1999

31 – 07 – 99 சஞ்சீவியில் தீபஜோதி விளையாட்டுக் கழகத்தால் விளம்பரப்படுத்தப்பட்ட வடமராட்சிப் பிரிவுக்குட்படுத்தப்பட்டோருக்கான கீழ்காண் போட்டிகள் யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ளதால் பங்குகொள்ள விரும்பும் வீரர்கள் 10 – 08 – 99 இற்கு முன்னர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

சைக்கிள் ஓட்டம் மரதன் ஓட்டம்

கயிறு இழுத்தல்

(10 – 8 - 99 திங்கள் பி.ப 2-00 மணிக்கு நடைபெறும்.)

செயலாளர்
தீபஜோதி ச. ச. நிலையம்
கூவில்–புலோலி.

(68067)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 | 25 |
| — | — |
| 07 | 07 |
| — | — |
| 1943 | 1995 |

அமரர் **செல்லையா சண்முகநாதன்**
(ஆசிரியர் இணுவில் இந்துக் கல்லூரி)

திதி: திரியோதசி (பிரதோஷம்) 09 – 08 – 1999

எங்கள் குல விளக்கே! நீங்கள்
எங்களை விட்டுச் சென்று நான்கு
ஆண்டுகளாயினும் உங்கள் பிரிவை
எங்களால் தாங்க முடியவில்லை.

உங்கள் ஆத்மா அமைதியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

வள்ளுவர் இல்லம்,
இணுவில் மேற்கு, இணுவில். (68064)

---

## கேள்வி அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினால் பளை பஸ் நிலையம் முன்பாக அமைக்கப்பட்டுள்ள ஏழு கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 20–08–1999 ஆம் திகதி பி. ப. 2.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 250 உம் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000 உம் செலுத்துவதன் பேரில் 19-08–99 ஆம் திகதி பி. ப. 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். 23-08-99 ஆம் திகதி மு.ப. 11-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களை ''செயலாளர், பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபை, பளை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்ட பெட்டியிலோ இட்டு சேர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கடைக் குத்தகைக்கான கேள்வி'' என எழுதப்பட வேண்டும்.

1. ஆகக்குறைந்த கேள்வித் தொகை 1,50,000/- ஆகும்.
2. கடைகளை தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வியினடிப்படையிலேயே வழங்கப்படும்.
3. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
4. இக்கடைகளில் மீன், இறைச்சி, மதுபானம், மரக்கறி விற்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையால் குறித்துரைக்கப்பட்ட ஒரே மாதிரியான சுருக்கு கதவுகளை தங்களது செலவில் தயாரித்து பொருத்துதல் வேண்டும்.
6. போதிய காரணங்களுக்காக கேள்விகளை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கு. ந. பாலசந்திரன்
செயலாளர்

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை, 4–8–1999. ([illegible])

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02–04–1927 | 10–07–1999 |

அமரர் **சின்னத்தம்பி இராசரத்தினம்**
(இரத்தினண்ணை)

எங்கள் குடும்பத் தலைவர் சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்கள் திடீர் என இயற்கை எய்திய செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவியவர்களுக்கும் மரணச் சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும் இரங்கல் உரைகளை நிகழ்த்தியவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரம் செய்து வெளியிட்டவர்களுக்கும் இன்னும் பல்வேறு வழிகளில் ஒத்தாசையாக இருந்தவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று 09—08—99 அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை அடுத்து நிகழவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருகர், பேரர்.

''மஞ்சுளா இல்லம்'',
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (68066)

---

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மாசிலாமணி பாக்கியமலர்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 – 06 – 1936 | 30 – 07 – 1989 |

திதி: 09 – 08 – 1999

தேவருலகில் வாழ்கின்ற – எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் - நாளும்
''பாக்கியமலர்'' காவுகின்றோம்.
பேசிச்சிரித்த முகம்பார்த்து - தாய்மைப்
பெட்டகத்துள் – தவழ்கின்றோம்
வீசிச் சிரிக்கும் பொன்காற்றில் – மாசில்
வீணையின் தவமாகின்றோம்.
அம்மாவைப் பாடிடுவோம் – தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எம்தாயை என்றும் வணங்குவோம்.

ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்பு மறவாத
கணவன், பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், தந்தை,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம். (68065)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

### நல்லூர்

ஆர். விக்னராஜா (089365 ஏ), ஆர். றொகானகுமார் (089607 ஏ), ஈ. உதயகுமார் (089609 ஏ), கே. ரமேஷ் (089610 ஏ), வை. மல்லிகாறதி (096713 ஏ), கே. வைரமுத்து (099324 ஏ), எஸ். மகேஸ்வரன் (099325 ஏ), கே. செல்லையா (099329 ஏ), கே. தவமணிதேவி (099329 பீ), கே. சுஜந்தா (099329 சீ),.

எஸ். கதிரமரதன் (099335 ஏ), வீ. திருநாவுக்கரசு (099344 ஏ), வீ.விமலாதேவி (099344பீ),ஜே.சிவானந்தன் (099346 ஏ), ஏ. சிவஞானசுந்தரம் (099372 ஏ), எஸ். பாலசுந்தரம் (099382 ஏ), ஆர். ராஜரட்ணம் (099393 ஏ), வீ. தங்கராஜ் (099394 ஏ), கே.கிருபராஜா [099394 பீ], ஆர். பரமேந்திரன் [099407 ஏ],.

கே. சாமித்தம்பி (099428 ஏ), எல். அழகையா(099430 ஏ), என். நடேசன் (099431 ஏ), ஏ. அன்ரன்ஜெனில் (099438 ஏ), எஸ் புவிராஜசிங்கம் (099450 ஏ). பேரா. வீ. கே. கணேசலிங்கம் (099493 ஏ), எஸ். நவரட்ணம் (099500 ஏ), ஏ. கனகராஜா (099556 ஏ). பீ. ராமலிங்கம்,(099557ஏ). ஜீ. பழனிநாதன்(099559ஏ), ஈ. ஆர். ஈ.லீனா (099563 ஏ), ஜே. பொனிப் (09987) பீ), ஜ. தம்பு (101702 ஏ), எஸ். சங்கரன் (104120 ஏ). பீ.ராதாகிஷ்னா(104135ஏ). எஸ். கருணாகரன் (104159 எ), கே. பிரஷாந்தி(104159 பீ), கே. கிருஷாந்தி(104159 சீ), கே கிருபாகரன் (104199 டீ). பீ. சுப்ரமணியம் (104171 ஏ).

கே. சுப்பிரமணியம் (104171 பீ), பீ. சத்தியரூபன் (104232 ஏ). ஆர்.சீ. லெம்பேட் (104233ஏ), டீ. ராஜசிங்கம் (104237 ஏ). யூ. விநாயகமூர்த்தி (104243 ஏ), வீ. துரைராஜ் (104256 ஏ), ரீ.மார்க்கண்டு (104264 ஏ),எம். கலைச்செல்வி (104264 பீ). ஈ. ஏ. யோகநாயகம் (104265 ஏ),ஈ ரவீந்திரநாயகம் (104271 ஏ),

எஸ். குணராஜா (104295 ஏ), ஏ. ரதீசன் (104296 ஏ), எம். அழககசுந்தரன் (104419 ஏ), ஏ. உமாதேவி (104419 பீ), ஜ. சிவகுருநாதன் (104425 ஏ). என். சண்முகசிங்கம் (104427 ஏ), எஸ். பத்மலிங்கம் (104428 ஏ). ஆர். பரராஜசிங்கம்(104435 ஏ). ரீ. பரராஜசிங்கம் (104435 பீ), எஸ். ஏ. யேசுதாசன் (104436 ஏ),

ரீ. கந்தசாமி (107558ஏ), வீ. சுந்தரம்பிள்ளை (107559 ஏ), பீ. ஜெனாதரன் (107566 ஏ), எச். வல்லிபுரநாதன் (107567ஏ), பீ. ஈஸ்வரதேவி (107567பீ), என். வைத்திலிங்கம் (707573ஏ), ஐ. தியாகராஜா (107575ஏ), ஏ. ரீ. கதிரவேலு (107581 பீ), ரீ. கதிரவேலு (107581 பீ). சுப்பிரமணியம்(107591 ஏ)

பீ. மல்லிகாதேவி (107591 பீ), வீ. கதிரவேலு (107595 ஏ), எஸ், பஞ்சாட்சரம் (107598ஏ). பீ. ஜனனி 107598 சீ), கே. ரகுநாதன் (107599ஏ), ஆர். பாலேஸ்வரன் (107599பீ), ஆர். சங்கவி (107599சீ), ரீ. வைத்திலிங்கம் (107606ஏ), ஆர். ரட்ணம் (107610ஏ), எம் விசுவலிங்கம் (107611ஏ).

என், வள்ளி (107621 ஏ). எஸ். ராசரட்ணம் (107642 ஏ), ரீ. கவிதா (107642பீ), எஸ். வேதாரணியம் (107644 ஏ), ஏ. வேதாரணியம் (107644 பீ). பீ சிவசோதி (107645 ஏ), எஸ். மார்க்கண்டு (107701). எம். சதீஸ் (107701 பீ). எம். ரதீஸ்குமார் (107701சீ). எஸ். பாலசிங்கம் (107702 ஏ)

வை. சபாரட்ணம் (107706 ஏ), பீ. விஜயலக்சுமி (107707 ஏ), பீ. தினேஷ் (107707 பீ), கே. பரமன் (107707 சீ), என். ரட்ணேஸ்வரி (107708 ஏ). பீ. அஜன்தன் (107708 பீ), பத்மநாதபிள்ளை (107709 ஏ). ஆர், சிவச்சந்திரன் (107711 ஏ), எஸ். சிவசந்திரன் (107711 பீ), எஸ். பாரதி (107711சீ).

ஆர். செபஸ்ரியாம்பிள்ளை (107720ஏ). கே துரைராஜா (107724ஏ). ஆர். யோகலிங்கம்(110325ஏ), என். வசந்தநாயகம்(079112ஏ), எஸ். பாலசுப்ரமணியம் (093385 ஏ), ஆர். பவநந்தி (093385 பீ), எஸ். கஜனரன் (093385 சீ), எஸ். சுரநாதன்(093385 டீ), எஸ். தாட்சாயனி (093385ஈ), பீ. தம்பியா (101930ஏ),

ஏ. ஆனந்தராசா (102005 பீ), ஏ சசிகலா (102005சீ), ஏ. ஹரிசங்கர் (102005டீ), ஏ. சிவசங்கர் (102005ஈ). எஸ். இளையதம்பி (102203 ஏ),ரீ.தேவயானி(102571ஏ). கே. சிவகுமரன் (103310ஏ). ரீ. தவநேசன் (103571ஏ). ஐ. தனகவேலாயுதம் (105041 ஏ), ரீ. துஷராஜ்(105041பீ).

ஆர் ஷர்மிலா (105041சீ). வை வினாசித்தம்பி (105044 ஏ). ஜே ராஜகோபால் (105059ஏ), ஆர். சாவியர (105059 பீ), ஆர். சிவசங்கர் (105059 சீ), சே.ஜெகநாதன் (05107ஏ), ரீ. பரமேஸ்வரி (105139ஏ), ரீ. லிங்கேஸ்வரன் (105139பீ). ஆர். துரைராசா (105191ஏ), வீ பத்மினி (102202எ).

எஸ் மகேந்திரம் (105230 ஏ),எம் ராஜேஸ்வரி(105230 பீ). எம். ஜியீபன் (105231 சீ), எம். சுஜீவன் (105231 டீ), கே மாணிக்கம் (105230 ஈ). எம். பாலச்சந்திரம் (105263ஏ). எஸ் சுப்ரமணியம் (105214ஏ), எஸ். அப்புக்குட்டி(105751ஏ). ஜ. செல்வதுரை (105750 பீ). எஸ். சுகிர்தா (105751சீ).

எஸ். வேலாயுதம் (105751 டீ), எஸ் பரமசோதி(105770 ஏ), எஸ்.மாணிக்கன்(105801 ஏ) எஸ். சுப்பையா (105803 ஏ). கே. சோமசுந்தரம் (105811ஏ), எஸ் வசந்தா (105881ஏ), பீ. விமலட்சுமி (105906ஏ), தட்சனாமூர்த்தி (106064ஏ), ஏ. ரஜீகரன் (106231ஏ), ஏ. புவனேஸ்வரி (106231பீ).

பீ. ராஜரட்ணம் (106236 ஏ). ஆர். திலகவதி (107135 ஏ), எஸ். செல்வராசா (108608ஏ), பீ. குமாரலிங்கம் (108831ஏ). கே. வைகுந்தவாசம் (108909ஏ), ரீ. சின்னதுரை (108924ஏ). எஸ். சிவப்பிரியா (108924பீ.) எம். பொன்னையா (108938 ஏ), ஆர். இதயராஜினி (108938பீ). டபிள்யூ சிவலிங்கம்(108984ஏ), ஆர்.சிவயோகராஜா (109052ஏ). எஸ். சுபாஜினிதேவி(109052 பீ). எஸ் சிவனுஜன் 109052 சீ), எஸ். மதுசன் (109052 டீ),

### சங்கானை

எஸ். சரசானந்தராசா (104424ஏ), ரி. வேலுப்பிள்ளை (104432ஏ), ஆர். எம். விசுவலிங்கம் (096391 ஏ). டபிள்யு. கண்ணபிரான் (097400ஏ), கே. நிமலா (097400பி). எஸ். கந்தசாமி (097401ஏ). கே. கமலாம்பிகை (097401பி), கே. சபாபதி (099799ஏ).

என். சந்திரமலர் (101310 ஏ), கே. நாகராசா (101310 பி), வி நாகராசா (101310 சி), கே. நடராசா (101368 ஏ). எஸ் செல்வச்சந்திரன் (102028ஏ) கே. பூபாலசிங்கம் (102076ஏ), ஆர். செல்லத்துரை (102104ஏ), எஸ். வைகுந்தவாசம் (102106ஏ), கே. தர்மலிங்கம் (102134ஏ) கே. தாமோதரம்பிள்ளை (102154ஏ) ஐ பாக்கியம் (102154பி).

ஏ. எஸ். ஸ்கந்தராசா (103274ஏ). ஜி. எல். ஸ்கந்தராசா (103274பீ), ரி. ரி. சிறோன்மன் (103326ஏ), டி. பேரகராணி (103438ஏ), ஐ பூரணானந்த சற்குணம் (103445ஏ), கே தவராசா (103590ஏ), ரி கமலராணி (103590பீ), கே வேலாயுதபிள்ளை (103593ஏ). பி. இரத்தினராஜா (103630ஏ). எஸ் சுவந்ரன் (103642ஏ). வி. கிருஷ்ணஐயர் (103665 ஏ),

ஏ. பாலு (103811ஏ), ஐ. இராசம்மா (105043ஏ), எம். கௌரி (105104ஏ), எம். கஜனி (105104பீ). ரி. கந்தையா (105158ஏ), என். மகேஸ்வரி (105189ஏ), ஏ. சிவபாதம் (105232ஏ). ஜே. ஈ. ஜெபசீலன் (105249ஏ), ஆர். ஜெபசீலன் (105249 பி),என்.சிவகுரு(105275ஏ).

கே. பாக்கியன் [105767 பீ], எஸ். சுறுகரன் [105772 ஏ], டபிள்யு. வேலுப்பிள்ளை [105826 ஏ]. ஏ. பாலசுப்பிரமணியம் [105834 ஏ]. ரி. தம்பித்துரை(105885ஏ),ரி.தனுஷன் [105885 பி]. ஆர். ஜே. விஜபகுமார் [105886 ஏ], ஏ. பொன்னுத்துரை [108693 ஏ], பி. செல்வநாயகம் [105985 ஏ], எஸ். வாரியவனதன் [105994 ஏ], கே. அம்பலகர் [106024 ஏ].

கே. மாலினி [106076ஏ]. டி. பிரதீபன் [106133 ஏ], என் சேதுராசா [106164 ஏ]. எஸ். சசிக்குமார் [106164 பீ]. என் மகேஸ்வரி [106195 ஏ]. என். உஷாநந்தினி [106195 பீ] கே. நிஷாந்தன் [106195 சீ], எஸ். பாலசுப்பிரமணியம் [106199 ஏ], பி. சிவசங்கர் [106199 பி]. ரி. தவனேஸ்வரன் [106244ஏ]. ஜி. ஜீவநாதன் [108621ஏ].

ஜே ஐ திருவலங்கமலர் (108621பி), ஐ சுப்ரமணியம் (108664ஏ), என்.சாரங்கன் (108641பி), ரி. பிரபாகரன் (108703ஏ), எம் சிறிசபேசா (108735ஏ),வி மீரா(108781 ஏ), என் கற்பரானந்தன் (108871ஏ), கே ராஜ்கோபால் (108871பி), வை. திருநாவுக்கரசு (108926ஏ), ஏ. ஸ்ரீலோகநாதன் (108927ஏ), எஸ்.சிவதரன் (108957ஏ).

ஜே நடராஜா [108955பீ]. எஸ்.ஜீவேஸ்வரன் [108957 பீ], என். ஸ்ரீஸ்கந்தராஜா [108957பீ], கே.பாலமுகுந்தன் [108957ஈ] ஆர். விஜயசேகரம் [108957 எவ்]. ஏ. வேணுநாஸ் (108957ஜி), வீ.செல்வக்குமார்(10857எச்) ரி. சுகிர்தன் (108957ஐ), எஸ் கமலதாசன் (108957 ஜே). எஸ் சஞ்சீவன் (108957 ஜே), எஸ்.சிவநாதன் (108957 எல்), ஐ. கணபதிப்பிள்ளை (108957எம்).

எஸ் விக்னேஸ்வரன் (108975 ஏ), டபிள்யு அநந்தவராசா (109013ஏ), எஸ் சிவஞானசுந்தரம் (109074 ஏ), எஸ். ஆபிரகாம் (109074பீ). (ஐ—ரி)

(தொடரும்)

# 10 பல நோக்கு கூ. சங்கங்களுக்கு லொறி கொள்வனவுக்கு கடன் உதவி

## 150 லட்சம் ரூபா ஒதுக்கீடு

அரியாலை, ஓக. 9

யாழ். மாவட்டத்தில் உள்ள பத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் லொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வழங்க சுமார் 150 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

லொறியை கொள்வனவு செய்யும் பொருட்டு ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் 15 லட்சம் ரூபா வீதம் கடனடிப்படையில் வழங்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

லொறி கொள்வனவு சம்பந்தமான கடன் உடன்படிக்கை விண்ணப்பத்தை கூட்டுறவுச் சங்கங்கள் பூர்த்தி செய்து திணைக்களத்திற்கு வழங்கியதும் இதற்கான காசோலை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், புலோலி, நல்லூர், தென்மராட்சி கிழக்கு, சுன்னாகம், சங்கானை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி, பருத்தித்துறை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு லொறிக்கொள்வனவிற்காக கடன் அடிப்படையில் இந்தநிதிவழங்கப்படவுள்ளது

# செல்வச்சந்நிதி உற்சவம் வியாழனன்று ஆரம்பம்

வடமராட்சி, ஓக. 9

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.35 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அன்று மாலை 4.30 மணிக்கு இரண்டாம் நாள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் 24 ஆம் திகதி 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் — 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் காலைத் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 4. 30 மணிக்கும் இடம்பெறும்.

இந்த உற்சவத்துக்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. (ஐ-க-173-15)

## விவரம் சேகரிப்பு

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அளவெட்டிப் பகுதியில் உள்ள வாகனங்களைக் கணக்கெடுக்கும், மற்றும் பதிவு செய்யும் பணிகளை அவ்வப் பகுதி [illegible] மேற்கொண்டு வருகின்றன. [ஐ-13]

# சுயதொழிலில் ஈடுபடும் 50 பெண்களுக்குக் கடன்

வலி. கிழக்கு ஓக. 9

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோப்பாய் மத்தி மாதர் சங்க அங்கத்தவர்களான 50 பெண்களுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சுழற்சி முறைக் கடனாகத் தலா 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

சுயதொழிலில் ஈடுபடும் 50 பெண்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாவாக மொத்தம் 5 லட்சம் ரூபாவை இந்நிறுவனம் பிரதேச செயலர் ஊடாக வழங்கியுள்ளது.

ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, தையல் போன்ற சுயதொழில்களில் ஈடுபடும் இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடனேயே இக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ 180)

# முன்பள்ளி ஆசிரியருக்கு விசேட பயிற்சி நெறி

'யுனிசெவ்' உதவித் திட்டத்தின் கீழ் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் 350 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

5 நாள்களைக் கொண்டதான இந்தப்பயிற்சி நெறி யாழ். மாவட்டத்தில் உள்ள 10 பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்பட்டது.

ஒவ்வொரு பிரிவிலும் 35 முன்பள்ளி ஆசிரியர்கள் இந்தப்பயிற்சியில்கலந்து கொண்டனர்.

நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அடுத்த வாரம் 70 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை —

யாழ் மாவட்டத்தில் முன்பள்ளிகளை பதிவு செய்யும் நடவடிக்கையில் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் ஈடுபட்டு வருகிறது.

இதுவரையும் 350 முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஐ-5-ரி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

28 – 06 – 1999 இல் சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

வைத்திய நிபுணர்

## பொ. சொர்ணலிங்கம்

அவர்களது வீட்டுக்கிருத்திய வைபவம் 10-08-1999 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும், இவ்வைபத்தில் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணமும் அதன்பின் நடைபெறவுள்ள மதியபோசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணமும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

''சொர்ண வாசா'',
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில். (68061)

## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## கைதடி புதிய வடிசாலை

### உசார் சாராயம் விலை குறைப்பு

கைதடி வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் 'உசார்' சாராயத்தின் விலை 11 – 08 – 99 திங்கட்கிழமை முதல் பின்வருமாறு விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

சில்லறை விலை – ( 750 மில்லி லீற்றர் )

செறிவு வீதம் 34%– 185/-

இவற்றை உத்தரவு பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

2 ஆம் கண்டுவில் ஒழுங்கை,
டச்சு வீதி, சாவகச்சேரி. (சி/8459)

## கேள்வி அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,

பளை.

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 23—08—1999 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே தினம் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் [இக்ராட்] தரம் எம்—9 அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள், பதிவு செய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விப்பத்திரங்களைக் கோருவதற்குத் தகுதியுடையவராவர் கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் இற்றைவரை செய்யப்பட்ட வேலை விபரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். பல நோக்கு கூ. சங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரது தகுதிச் சான்றிதழையும், இயக்குநர் சபைத் தீர்மானத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களைப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் 20 – 08 – 99 ஆம் திகதிக்கு முன்பு குறித்துரைக்கப்பட்ட கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் பிரதேச சபைப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம். போதிய காரணங்களுக்காகக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| பளை பஸ் நிலையம் முன்பாகச் சந்தைப் புறத்தில் கடைத் தொகுதி அமைத்தல் (இரண்டாவது கட்டம்) | 500/- | 20,000/- |

கு. ந. பாலசந்திரன்
செயலாளர்
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை, 04-08-1999 [சி/8462]

## வில்லூன்றியில் தீர்த்தமாட அனுமதி

அரியாலை, ஒக. 9

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் புதன்கிழமை வில்லூன்றி தீர்த்தக் கேணியில் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்வதற்கான விரிவான ஏற்பாடுகளை வில்லூன்றி தேவஸ்தான பரிபாலன சபை மேற்கொண்டுள்ளது.

காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 8 மணிக்கு தீர்த்த வாரியும் இடம்பெறும்.

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து பிதிர்க்கடன்களைச் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-17-103)

## வைத்திய அதிகாரி நியமனம்

வேலணை, ஒக 9

புங்குடு தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரியாக டாக்டர். செ. செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவுப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இதுவரைகாலமும் வேலணை கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரியே வாரத்தில் இரண்டு நாள்கள் இவ்வைத்திய சாலைக்குச் சென்றுநோயாளிகளைப் பார்வையிட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-167)

## புனரமைப்பு

வலி. தென்மேற்கு, ஒக. 9

கடந்த 15 வருடங்களுக்குப் பின்னர் வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

ஆரம்ப கட்டவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விரைவில் முழு வேலையும் பூர்த்தியடைந்துவிடுமென்றும் தலைவர் தெரிவித்துள்ளார். ]ஐ-185]

தென்மராட்சி மக்கள்

## சுலபமாக ரீ. வி. டெக் திருத்த

தென்மராட்சி மக்கள் போக்குவரத்துச் சிரமமின்றி
ரீ. வி., டெக், றேடியோ, மணிக்கூடுகளை
திருத்திக்கொள்ளவும், சிரமமான திருத்த வேலைகளை
யாழ்ப்பாணத் தலைமையகத்தில் திருத்திக்கொள்ளவும்

## வீனஸ் டெல்கா

11, பஸ் நிலையம், சாவகச்சேரி,
(மீன் சந்தை அருகில்)

(சி/830)ε

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 0 – 09 – 1918 | 10 – 07 – 1999 |

அமரர் **ச. ஐ. கனகரத்தினம்**

[ஓய்வு பெற்ற வெளிக்கள உதவியாளர்,
சுகாதாரத் திணைக்களம்]

திதி; 09 – 08 – 1999

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், வண் — வட. மேற்கு, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தி. சயம்பு ஐயம்பிள்ளை கனகரத்தினம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும் இன்று 09 – 08 – 1999 அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் ஏனைய பல உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவர் பிரிவால் வாடும்
பிள்ளைகள்,
மருமக்கள் , பேரப்பிள்ளைகள்.

தகவல்:
க. நவரத்தினராசா,
[தாதி உத்தியோகத்தர்],
பளை. [67902]

உ

### வியாபாரிமூலை இன்பர்சிட்டி
### ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய
### வருடாந்த

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 17 – 08 – 99 | செவ்வாய்க்கிழமை காலை 9 மணி |
| பூங்காவனம்: | 22 – 08 – 99 | ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 — 9 மணி |
| திருமுழுக்கு: | 23 – 08 – 99 | திங்கட்கிழமை காலை 7 — 10 மணி |
| வேட்டை: | 24 – 08 – 99 | செவ்வாய்க்கிழமை பி. ப. 3 — 6 மணி |
| சப்பறம்: | 24 – 08 – 99 | செவ்வாய்க்கிழமை இரவு 6 — 9 மணி |
| இரதோற்சவம்: | 25 – 08 – 99 | புதன்கிழமை காலை 9 மணி |
| தீர்த்தம்: | 26 – 08 – 99 | வியாழக்கிழமை காலை 6 மணி |
| சண்டேசுவரர் உற்சவம்: | 27 – 08 – 99 | வெள்ளிக்கிழமை பி. ப. 4 — 7 மணி |
| வைரவர் சாந்தி: | 28 – 08 – 99 | சனிக்கிழமை மாலை 5 — 7 மணி |
| மணவாளக்கோலம்: | 29 – 08 – 99 | ஞாயிற்றுக்கிழமை காலை 7 — 11 மணி |

அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து சகல சித்திகளும் பெறுவீர்களாக

**தினமும் சமய சொற்பொழிவு இடம்பெறும்.**
**10 தினமும் பகல் 11 மணிக்கு ஆலய மடத்தில் அன்னதானம் நடைபெறும்.**

குறிப்பு: தினமும் பகல் உற்சவம் காலை 6 — 10 மணிக்கும். இரவு உற்சவம் பிற்பகல் 3 — 7 மணிக்கும் நடைபெறும். விசேட தினங்களில் நேரமாற்றம் ஏற்படலாம்.

வே. க. கந்தையா
ஆலய நிர்வாகப் பொறுப்பாளர்

[சி/8411]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒளிவு மறைவு தேவையா?

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள, தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதேச அலுவலகம் எதுவும் மூடப்படமாட்டாது என உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

தேசிய ஆணைக்குழுவின் ஆறு பிரதேசக் கிளைகளை — மட்டக்களப்பு, கல்முனை உட்பட மூடுவது என்று முன்னர் முடிவாகியது.

மனித உரிமைகளைப் பேணுவது இப்போது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. குடிமக்களின் மனித உரிமைகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவது அரசாங்கங்களின் கடமையும் பொறுப்பும் ஆக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கும் மேலதிகமாக சமீப காலமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் ஐரோப்பிய நாடுகள் மனித உரிமைகள் பேணப்படுகின்றனவா என்பதனை உன்னிப்பாகக் கவனிக்கின்றன.

அதனால் இலங்கை அரசாங்கமும் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளைச் சமீப காலமாக பெரும் எடுப்பில் மேற்கொண்டது. அவற்றில் ஒன்றே தேசிய மனித உரிமை ஆணைக் குழு நிறுவப்பட்டமை எனலாம். நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மனித உரிமைகள்பேணப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்கும் கண்டறியும் நோக்குடனேயே பிரதேசக் கிளைகள் நிறுவப்பட்டன.

போர் நடைபெறும் வடக்கு—கிழக்கில், மனித உரிமைகள் அதிக அளவில் மீறப்படும் சாத்தியம் உண்டு என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. அதே வேளை ஏனைய பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறப்படவில்லை. என்பதுமல்ல. ஆகையால் மாவட்டந் தோறும் மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதேச அலுவலகங்களை நிறுவ வேண்டிய தேவை உண்டு.

அவ்வாறு இருக்க, ஏற்கனவே இயங்குபவற்றை மூடுவதற்கு முடிவு எடுக்கப்பட்டதற்கான நோக்கம் என்ன என்பது புதிராகவும் மர்மமாகவுமே உள்ளது. கிழக்கில் உள்ள இரண்டையும் அவற்றில் உள்ளடக்கியது மேலும் சந்தேகத்தைத் தருவதாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளில் ஒரு தரப்பினரே பிரதேச அலுவலகங்களை மூடுமாறு ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்தனர் என்பது பெரும் அதிர்ச்சி தருவதாகும். மனித உரிமைகள் மீறப்படுவது வெளிச்சத்துக்கு வந்தாலே அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ளலாம்.

அதிகாரிகள் அதற்குக் குந்தகமாக செயற்படுகிறார்கள் என்றால் மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் அல்லது செல்வாக்கு இதற்குத் தூண்டுதலாக இருக்குமோ என்று ஐயுறவேண்டி உள்ளது.

பெயருக்குக் கொழும்பிலும் சில இடங்களிலும் ஆணைக்குழு அலுவலகங்கள் இயங்கினால் மனித உரிமை மீறல்கள் பலவற்றை இருட்டடிப்புச் செய்து, குறைத்துக் கணக்குக்காட்டி, கடன் வழங்கும் நாடுகளிடம் நல்ல பெயர் வாங்கலாம் என்ற நோக்கமா? அல்லது மனித உரிமைகளை மீறுவோர் தமக்கு வேண்டியவராகி விட்டால் எவ்வாறு வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது என்ற அச்சமா? ஒளிவு மறைவு இல்லாத கொள்கை மனித உரிமை பேணுதலிலும் மிகக் கட்டாயம்,

# ஆடி அமாவாசை - நியமங்களுடன் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதம்

**சிவஸ்ரீ சு.து. சுந்தரமூர்த்திகுருக்கள் (பி.ஏ)**

ஆடி அமாவாசை என்றதும், எமது நினைவிற்கு வருவது கீரிமலைச் சமுத்திர தீர்த்தமே. இத் தீர்த்தம் பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. நகுலமுனிவர் தவஞ் செய்து நகுலேஸ்வரப் பெருமானின் அருள் பெற்றமை, மாருதப்புரவீகவல்லி விரதமிருந்து சமுத்திர தீர்த்தத்தில் நீராடி குன்ம நோய் நீங்கப் பெற்றமை, பிருகு முனிவர் தமது தந்தையாருக்கு இத்தலத்திலே சிரார்த்தம் செய்து பிதிர்சாபம் நீங்கப்பெற்றமையும் வரலாற்றுச் சான்றுகளாகும்.

மாவை முருகப்பெருமானுக்கு ஆலயம் அமைத்து, காங்கேயமூர்த்தியை இந்தியாவிலிருந்து வரவழைத்து மாவிட்டபுரத்தில் பிரதிஷ்டை செய்த காலந்தொட்டு கீரிமலை சமுத்திர தீர்த்தத்தில் ஆடி அமாவாசை தினத்திலே தீர்த்தோற்சவம் நடைபெற ஏற்பாடு செய்தமையும் இத் தீர்த்தத்தின் சிறப்புக்களை உணர்த்துகின்றன.

இக் காலப்பகுதியிலும் ஈழத்து சைவ மக்கள் ஆடி அமாவாசை தினத்தில் சமுத்திர தீர்த்தமாடி பிதிருக்கு சங்கற்ப பூர்வமாக நீர்க்கடன் நிறைவேற்றுகிறார்கள். அன்றைய தினம் பிதிர்கடன், தேவகடன் ஆகிய இருவகை கடமைகளையும் ஓரிடத்தில் ஒரே தினத்தில் நிறைவேற்றுதற்கு வாய்ப்பையும் பெற்றுள்ளார்கள்.

மாதந்தோறும் வரும் அமாவாசை தினம் பிதிர்கடன் நிறைவேற்ற உகந்த நாள் பிதிரரை நினைவு கூர்ந்து சங்கற்பித்து திலோதகம் [எள்ளுடன் நீரும்] இறைத்தல் நமது முக்கிய கடமை. சூரியன் தென்திசை நோக்கி நகரும் தெட்சிணாயன ஆரம்ப மாதம் ஆடிமாதம்ஆடிபிறந்துவிட்டால் தென்திசை வாழ் பிதிரர் குதூகலிப்பர் தம்மைத் தம் சந்ததியினர் நினைவு கூர்ந்து எள்ளினால் பசியையும் நீரினால் தாகத்தையும் தீர்ப்பார்கள் என்ற ஆதங்கத்தோடு இருப்பார்கள். அவர்களின் ஆதங்கத்தைப் பூர்த்தி செய்யத் தவறின் சாபம் இட்டுவிடுவார்கள். இது கற்பனையோ மூடநம்பிக்கையோ அல்ல ஆபஸ்தம்பர், சௌனகர், போதாயனர் போன்ற மகரிஷிகளால் எடுத்துரைக்கப்பட்ட பேருண்மைகள்.

அமாவாசை அல்லது சிரார்த்த தர்ப்பணத்திற்கு உகந்தது கருப்பு நிற எள்ளே. ஏனெனில் கருவண்ணனான கண்ணபிரானிடமிருந்து உதிர்ந்தவை கருப்பு நிற எள். சிரார்த்த இரட்சகரும் கண்ணபிரானே. அத்துடன் பிதிர்கடன் நிறைவேற்றுவதால் ஏற்படக்கூடிய நற்பலனை அளிப்பவனும் அவனே. மகாபாரதத்தின் வனபர்வதத்தில் இச்சிறப்பு உரைக்கப்பட்டுள்ளதைக் காண்க.

உத்தாராயணமும் பூர்வாக்ஷனமும் (முற்பகல்) தேவ பூஜைக்குரிய காலம். தெட்சிணாயனமும் அப்ராஹ்னமும் (பிற்பகல்) பிதிரருக்கு உகந்த காலம். ஆடிமாதத் தெட்சிணாயனமும் பிதிரருக்கு உகந்த மாதமாகவும், தொடர்ந்து புரட்டாதி மாதத்து அபரபக்க நாள்களும் மகாளய பட்சமாகவும் கொள்ளப்பட்டு வருகிறது மேலும் திங்கட்கிழமையுடன் பொருந்தி வரும் அமாவாசைத் திதி விசேடமானது இத்தினத்தில் அரச மரத்தடியில் சங்கற்பித்து பிதிர் பூஜை வழிபாடு இயற்றினால் பெருவாழ்வும் சந்தான விருத்தியும் கிட்டுமெனச் சொல்லப்படுகிறது.

அமாவாசை தினத்தில் சைவசமயி கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம் பின்வருமாறு: அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து சிவசின்னங்களைத் தரித்து ஆலய வழிபாடு செய்து. திருமுறை பாராயணம் ஆகியவற்றை முற்பகலில் செய்து பிற்பகலில பிதிரரை நினைந்து சங்கற்பித்து தர்ப்பணம் செய்ய வேண்டும். இக் கடமையை ஒரு குரு மூலமாகச் செய்தலே சிறப்பு. முதல் நாளும் அன்றும் மறுநாளும் விரதமிருத்தல், மாமிச உணவை ஒதுக்குதல், தாம்பத்திய சுகங்களை நோக்காதிருத்தல் பிரதான கடமைகளாகும்.

தாமச, இராச்ச குணங்களைத் தூண்டும் பொருள்களான வெங்காயம், பூடு, முருங்கைக்காய், சுரைக்காய், நீற்றுக்காய், தாம்பூலம் ஆகியவற்றை அமாவாசை தினத்தில் ஒதுக்கிவிட வேண்டும். இவை பிதிர்கடன்களை நிறைவேற்றுவதற்கு குந்தகம் விளைவிப்பன.

அமாவாசை தர்ப்பணம் செய்வதற்கு பொருத்தமான புனிதமான இடங்களாகப் பின்வருவன குறிக்கப்படுகின்றன. நதி, சமுத்திரம் என்பன உத்தமமானவை. குளம், கிணறு, கேணி, மத்திமமானவை. ஏனைய இடங்கள் அதமமானவை.

எனவே ஆடி அமாவாசை தினத்தில் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி நமது பிதிர்க்கடனை நிறைவேற்றுவோமாக!

★

# புலிகளுடனான பேச்சைத் தள்ளிப்போடுவது தமிழரை அழிக்கவே எனச் சந்தேகம் எழுகிறது

## வலி வடக்கு பிரதேசசபைத் தலைவர் ஸ்ரீபாஸ்கரன்

யாழ்ப்பாணம், ஓக. 9

தமிழ் மக்களின் நலனில் அக்கறைஉடைய அரசாக இருந்தால் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அதனைத் தள்ளிப் போடுவது தமிழினத்தை அழிப்பதற்காகவே என்ற சந்தேகம் எமக்குண்டு.

வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. வடக்குப் பிரதேச சபையின் கூட்டம் கடந்த புதனன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. அக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எங்கே சென்று கொண்டிருக்கின்றோம் என்பது எவருக்கும் தெரியாத புதிராக உள்ளது. வன்னியில் மக்கள் பட்டினியால் வாடி வதங்குகிறார்கள் — இங்கு போசாக்கின்மையால் மக்கள் பொலிவிழந்து காணப்படுகின்றனர். எமது பிரதேசத்தில் 20 ஆயிரம் மக்கள் மீளக் குடியமரவில்லை. 90 வீதத்துக்கு மேலான வீடுகள் சேதமாக்சப்பட்டுள்ளன. இவற்றிற்கு நட்டஈடும் இல்லை. அரசு எ.சகென எடுத்த பணத்தை தென்னிலங்கை அபிவிருத்திக்கு உபயோகிக்கின்றது. நீர் கொழும்பு நகரை அழகுறச் செய்ய 750 மில்லியன் ரூபா செலவு செய்யவுள்ளது. சீதாவாக்கையில் 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. ஆனால் எமது மீனவரும், விவசாயிகளும் வேலையற்று இருக்கின்றனர்.எனவே உடனடியாக அரசு யுத்தத்தைநிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தாவிடில் எந்தப் பேரினவாத அரசாங்கமும் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது பேச்சுவார்த்தை மூலம்தான் இனப்பிரச்சினையை தீர்க்கலாம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். எனவே போலிச் சாட்டுக்களைக் கூறாது தமிழ் மக்களின் நலனில் அக்கறை உடைய அரசானால் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இதனைத் தள்ளிப்போடுவது தமிழினத்தை அழிப்பதற்கென்ற சந்தேகம் எமக்குண்டு. பொருளாதார ரீதியாக நிமிர்ந்து நிற்கமுடியாத நிலையில் உள்ளோம். வெளிநாட்டு நிறுவனங்களிடம் நாம் உதவிகோரி அனுப்பும் கடிதங்கள் அவர்களிடம் சென்றடைவதில்லை. அரசும் பாராமுகமாக இருக்கின்றது. மீளக்குடியமர விடாதவர்களுக்கு நிவாரணம் மட்டும் போதாது. தொழில் இழந்தமைக்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகையாக கொடுக்க வேண்டும் என்று கோரினோம். ஆனால் அரசு செவிசாய்க்கவில்லை. இந்த நிலையில் தமிழர்களாகிய நாங்கள் தனித்து வாழ்வோமாயின் சுபீட்சமாக வாழலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதனால் குறைந்த பட்சக் கோரிக்கையாக சுயநிர்ணய உரிமையுடன் சமஷ்டி அடிப்படையில் பிறநாட்டு உதவிகளை நேரடியாகப் பெறும் அதிகாரத்துடன் மாகாண சபை இருக்குமாயின் அதனை வரவேற்கத் தயாராகவுள்ளோம். இல்லையேல் விரக்தியின் விளிம்பில் உள்ளவர்கள் விடுதலைக்காகப் போராடுவதே அவர்களுக்குரிய ஒரே ஒரு வழியாகும்'' — என்று கூறினார்.

[ஐ]

**நாளை**

**ஆடி 25**

செவ்வாய்க்கிழமை

**திதி:** சதுர்த்தசி

முன் இரவு 7.05 வரை.

**நட்சத்திரம்:** பூசம்

பின் இரவு 4.23 வரை.

**சுபநேரம்:** 10.34—12 04

ராகுகாலம்: 3.04 –4.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நல்லவர்களின் நல்ல தன்மையை நல்லவர்களே உணர முடியும். தீயவர்களால் ஒரு போதும் உணர முடியாது.

— பழமொழி நானூறு

# மூக்குக் கண்ணாடி எடுத்துவர கொழும்பில் அனுமதி மறுப்பு

யாழ். குடாநாட்டில் கண் பார்வை குறைந்தவர்களுக்கும், காதுகேளாதவர்களுக்குமென வழங்கப்பட்ட ஒரு தொகை கண்ணாடிகளும், காதுகேட்கும் கருவிகளும் பாதுகாப்பு படையினர் அனுமதிவழங்க மறுத்ததையடுத்து திருப்பி அனுப்பப்பட்டதாக சமூகசேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவிக்கையில்வடக்கு—கிழக்குமாகாண சமூகசேவைகள் அமைச்சினால்யாழ்.மக்களுக்கு இலவசமாகவழங்கவென மூக்குக்கண்ணாடிகளையும், காதுகேட்கும் கருவிகளையும் விமானத்தில் கொண்டுவர பாதுகாப்பு தரப்பினரின் அனுமதி கேட்கப்பட்டதாகவும் அவர்கள் அனுமதிதர மறுத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

(ஐ—ரி—180)

## கூ. சங்கம் பொறுப்பேற்கும்

நல்லூர், ஓக 9

தென்மராட்சி பல. நோக் கூ. சங்கம் தனது எல்லைக்குள் அடங்கும் நவபுரத்தில் வசதி குறைந்த நிலையில் உள்ள இரண்டு பாலர் பாடசாலைகளைத் தனது பொறுப்பில் எடுக்கவுள்ளதாக மேற்படி பல நோ. கூ. சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தற்சமயம் ஐந்து பாலர் பாடசாலைகளை மேற்படி பல. நோ. கூ. சங்கம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது

(ஐ-103-30.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரம் மரக்கன்றுகள் உற்பத்திக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 9

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வட மாநில அலுவலகத்தினால் இவ் வருடம் 50 ஆயிரம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகளில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கப்படவுள்ளன என்று அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வட பிரதேச முகாமையாளர் க. விஜயரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில்அழிந்துள்ள மரங்களுக்கு பிரதியீடாகப் புதிய மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழே இந்த மரக்கன்றுகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டதாக அவர் கூறினார்.

கடந்த வருடம் 2 ஆயிரத்து தொளாயிரம் மரக் கன்றுகள் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டன என்றும்—

மலை வேம்பு, சவுக்கு, நெல்லி, வேம்பு, தேக்கு, சமன்டலை போன்ற மரக் கன்றுகளே உற்பத்தி செய்யப்பட்டன என்றும்—

அவர் தெரிவித்தார்.

தற்பொழுது அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நல்லூர் கிளையில் 3 ஆயிரம் சமன்டலை மரக் கன்றுகள் விற்பனைக்கு இருப்பதாகவும் 15 ரூபா வீதம் பொது மக்களுக்கு இம் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

[ஐ–5–ரி]

## களவாடப்படும் மாடுகள் இறைச்சிக்கு 'விற்பனை

### கோப்பாய் பொலீஸ் எச்சரிக்கை

வலி. கிழக்கு ஒக. 9

இறைச்சிக்காகக் கொண்டு வரப்படும் மாடுகள் தொடர்பாக இறைச்சிக்கடை உரிமையாளர்கள் விழிப்புடனிருக்குமாறு கோப்பாய் பொலீஸ் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உரிமையாளர்கள் இன்றி குறியிடப்படாத மாடுகளை இறைச்சிக்கு கொள்முதல் செய்யவேண்டாம்— இறைச்சிக்காக வெட்டப்படும் மாடு ஆடுகளை சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடனேயே வெட்டப்படல் வேண்டும். இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை—

வலி- கிழக்குப் பகுதியில் மாட்டுத் திருடர்களின் தொல்லைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி, ஊரெழு போன்ற பகுதிகளிலேயே இச் சம்பவங்கள் வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த வாரம் ஊரெழுப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் 15 ஆயிரம் ரூபா மதிக்கத்தக்க மாடும் கன்றும் இரவு வேளையில் களவாடப்பட்டுள்ளன.

(ஐ–ரி–180-51)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம அலுவலர்
திரு. பொ. புவனேஸ்வரராசா
அவர்களின் தாயார்

திருமதி பொன்னம்பலம் நல்லம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும்.
பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்,
வலி. தெற்கு, உடுவில்.

(68068)



## ஓராண்டு நினைவுகள்



திருமதி
செல்லத்துரை மகேஸ்வரி

மலர்வு 24 – 10 – 1944
மறைவு 21 – 07 – 1998

திதி: திரயோதசி (09 – 08 – 99)

உள்ளம் மறவாது உலகம் உள்ளவரை
அள்ளி அமுதம் அளித்ததை நினைக்கும்வரை
கள்ளம் இல்லாநின் அன்பினை எண்ணும்வரை
வெள்ளை உள்ளத்தாளே உன்னைநாம்
நினைப்போமே!

கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

இல. 16/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(68058)


## குளத்தைப் புனரமைக்க கோரிக்கை

அரியாலை, ஒக. 9

ஈச்சமோட்டையில் உள்ள குண்டுக் குளத்தை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்று மாநகராட்சி மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாரிகாலங்களில் இந்தக் குளம்வெள்ளத்தினால்நிரம்பி வழிவதால் குளத்தை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் சிரமப்படுவதுடன் வீடுகளுக்குள் வெள்ளம் செல்லும் நிலையும் ஏற்படுகின்றது.

இதைத் தவிர்ப்பதற்கு குளத்தை புனரமைப்பதுடன் குளத்தைச் சுற்றி அணைக்கட்டு அமைத்துத் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

[ஐ-17]

## ஆஸ்பத்திரிக்கு கட்டில்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்காக யாழ். சுகாதாரத் திணைக்களம் நோயாளருக்கான இரும்புக் கட்டில்கள், வாங்குகள், அலுமாரிகள் ஆகியனவற்றை திணைக்கள நிதியிலிருந்து கொள்வனவு செய்துள்ளது.

இத்தளபாடங்கள் தேவைப்படும் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. [ஐ-135]

## முதியோர் வாரம் கொண்டாட ஏற்பாடு

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாந்திகதி முதல் ஏழாம்திகதி வரை இடம்பெறவுள்ள முதியோர் வாரத்தை கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில்சிறப்பாகக்கொண்டாடுவதென முதியோர்இல்ல ஆலோசனைச் சபை தீர்மானித்துள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற ஆலோசனைச் சபைக்கூட்டத்தில் முதியோர் விழாச் செயற்பாடுகள் குறித்து ஆராய சி.சுப்பிரமணியம் செ. யோகானந்தராசா, சி.சி. வரதராசா ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

(ஐ–103-30)

## கிராமிய வங்கிகளின் தேவைகள் குறித்து ஆராய்வு

அரியாலை, ஒக. 9

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளில் ஆளணி, கணிப்பீட்டு இயந்திரங்கள் மற்றும் காகிதாதிகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசமும், கூட்டுறவுத் திணைக்களமும் இணைந்து கிராமிய வங்கிகளின் முகாமையாளர் மற்றும் வங்கிச் சேவை முகாமையாளர், உள்துறை கணக்காய்வாளர்களுக்கான 'கொடுக்கல் வாங்கல்' மற்றும் 'உள்துறை கணக்காய்வு' சம்பந்தமான கருத்தரங்கினை அண்மையில் நடத்தி இருந்தன.

சமாசத்தலைவர் சீ வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கிராமிய வங்கிகளில் ஆளணி, கணிப்பீட்டு இயந்திரங்கள் மற்றும் காகிதாதிகளுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சகல கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் கிராமிய வங்கிகளின் சமாசம் மற்றும் கூட்டுறவுத் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் வட்டி வீதங்களை அமுல்படுத்துதல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன், திணைக்கள பரிசோதகா சு. கணேசமூர்த்தி, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஆர். புவன்ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

[ஐ–17]

## நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரம்பேணுவதுபற்றி கலந்துரையாட அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 9

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டுதிருவிழாக் கால ஒழுங்குகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வரும் பெருமளவான பக்தர்களின் உணவுத் தேவை தாக சாந்தித் தேவைகளை சுகாதாரமான முறையில் மேற்கொள்ளவும் நோய் பரவாத சூழலை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் இதில் கலந்துரையாடப்படும்.

எனவே அனைத்துவகையான உணவு, ஐஸ்கிறீம், குளிர்பானத்தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகிக்கும் நிலையங்கள், உணவு, தேநீர்ச்சாலைகள், தற்காலிக உணவு, குளிர்பானக் கடைகள் நடத்த இருப்பவர்கள், தண்ணீர்ப்பந்தலில் குடிதண்ணீர் மற்றும் மென்பானங்கள் வழங்க இருப்பவர்கள் சகலரும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றாத நிறுவனங்கள் திருவிழாக் காலத்தில் உணவு, ஐஸ்கிறீம் மற்றும் குளிர் பானங்கள் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

(ஐ - 9)


ஓம்

## கலாபூஷணம் விருது [1999]

பெற்றோருக்கு

### பாராட்டுவிழா

இடம்: விசாலாட்சி வித்தியாலயம், மல்லாகம்.
காலம்: 09–08–99 திங்கள் காலை 10.30.மணி
விழாக்குழு: வலிகாமம் வடக்குப் பிரதேச மக்கள்.

மங்கள இசையும் ஊர்வலமும் இணைந்து பாராட்டப்படுவோர்

கலாபூஷணம்
இ. ஞானசுந்தரம்

கலாபூஷணம்
ஏ ரி. பொன்னுத்துரை

கலாபூஷணம்
வ. செல்லத்துரை

கலாபூஷணம்
எல். திலகநாயகம் போல்

வாழ்த்துரை வழங்குவோர்
சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்
அருட்கவி சீ. விநாசித்தம்பி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
திரு. மு. சபாநாதன் [பதில் நீதிவான்]

சிறப்புரை வழங்குவோர்
பண்டிதர் க. நாகலிங்கம்
திருமதி கோகிலா மகேந்திரன் [உதவிக் கல்விப் பணிப்பாளர்]
திரு. க. பீதாம்பரம்

பதிலுரை: பாராட்டுப் பெறுவோர்
நன்றியுரை: செ. சச்சிதானந்தம்

அனைவரும் அன்புடன் வந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

திருமதி ப. திலகநாயகம் போல்
வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள் சார்பில்
வலிகாமம் வடக்கு.

(68059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர தெய்வ ஆசி வேண்டி வெள்ளி தோறும் சர்வ மதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 9

இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு ஏற்படத் தெய்வ ஆசி வேண்டி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பிரதி வெள்ளிக்கிழமையும் உபவாசத்துடனான சர்வ மதப் பிரார்த்தனையை நடத்தவிருக்கின்றனர்.

வன்னி மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த ஒருவாரமாக நடைபெற்று வந்த சர்வமதப் பிரார்த்தனை முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகள் நாட்டின் ஏனைய பகுதிகளுடனான தொடர்புகளை இழந்து தனித்து விடப்பட்டுள்ளன.

அவசர தேவைகளுக்காகவும் வியாபார நோக்கத்துடனும் வவுனியா வரை வந்தோர் மீண்டும் தம்மிடங்களுக்குச் செல்ல முடியவில்லை. அவசர சிகிச்சைக்குரிய நோயாளிகளைக் கொண்டுசெல்ல முடியவில்லை, நிவாரண உதவி வாகன அணிகள் செல்ல முடியவில்லை, அத்தியாவசிய தேவைகளுக்காகச் செல்வோர் செல்ல முடியவில்லை.

உயர்தரப் பரீட்சை நடைபெறும் சூழல் ஏற்படுமா? என்று உயர்தர வகுப்பு மாணவர்களிடையே சந்தேகம் எழுந்திருந்தது.

எல்லாத் தடைகளுக்கும் தற்போது மெல்ல மெல்ல விடை கிடைத்துள்ளது. இந்த ஏற்பாடுகள் உள்ளத்தாலும் உடலாலும் சோர்ந்துபோய் இருந்த எமது மக்களுக்குத் தற்காலிக ஓர் உற்சாகத்தைக் கொடுத்தாலும் இந்த ஏற்பாடுகள் எதுவரைக்கும் என்பது மனத்துக்குள் அவர்கள் கேட்கும் கேள்வியாகவே அமையும்.

வன்னிப் பகுதி மக்கள்துயர்களைய குரல் கொடுத்த அத்தனை அமைப்புக்களும் பல்கலைக்கழகங்களும் தனி மனிதர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தங்களின் உறவுகள் இரத்தத்தின் இரத்தங்கள் அனுபவிக்கின்ற துயரங்களோடு தம்மையும் இணைத்து அவர்களின் துன்பங்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள், வாதிட்டவர்கள் ஆத்மீக வழியில்இறைவனைவேண்டிநின்றவர்கள் அனைவருக்கும் வன்னிப் பகுதி வாழ் மக்கள் என்றும் நன்றியுடையவர்களே.

தடைப்பட்ட போக்குவரத்துப் பாதை திறக்கப்பட வேண்டும், அங்கு ஆரம்பமாகி நடைபெறுகின்ற உயர்தரப் பரீட்சைகள் சுமுகமாக நடைபெற வேண்டும் என நாம் மேற்கொண்ட சர்வமத பிரார்த்தனைக்கு ஒரு வழி தென்பட்டுள்ளது.

ஆத்மீக வழிக்கு அழிவே இல்லை என்பதை நன்கு உணர்ந்து திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்று கடந்த ஒரு வாரகாலமாக தொடர்ச்சியாக இந்த கூட்டுப் பிரார்த்தனையை எமது ஒன்றியம் மேற்கொண்டிருந்தது.

எமது தலையாய வேண்டுதலான தடைப்பட்ட போக்குவரத்துப் பாதை இறைவன் திருவருளால் திறப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இறைவனுக்கு நன்றி கூறி எம் இம்முயற்சியை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வருகின்றோம்.

இந்த சர்வமதப் பிரார்த்தனையில் எமது முயற்சிக்கு பக்கபலமாகவும் ஆதரவாகவும் எம்முடன் சேர்ந்து உழைத்த அனைவரையும் நன்றியுள்ளத்தோடு நினைக்கின்றோம்.

இந்தத் தொடர் பிரார்த்தனைகளில் பங்கெடுத்த சர்வ மதத் தலைவர்கள், சர்வ மதக்குருக்கள், கன்னிபாஸ்திரிகள். துறவிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், அனைத்துப்பீட மாணவர்கள் ஆகியோருக்கும் இம்முயற்சிக்கு முன்னுரிமை கொடுத்து செய்திகளை பிரசுரித்த பத்திரிகைகளுக்கும் செய்தியூடகங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சிறிய முயற்சிக்கூடாக ஆன்மீக வழி, அதன் மகத்துவம் எத்தகையது என்பதை உணர்ந்துள்ள இந்த வேளை, தொடர்ந்து செல்கின்ற எமது இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வொன்று வேண்டி பிரதி வெள்ளிதோறும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கொள்ள இருக்கின்ற உபவாசத்துடனான சர்வமத பிரார்த்தனைக்கு மாணவர்கள் அனைவரும் தமது கடமையையுணர்ந்தவர்களாக பிரார்த்தனை செய்ய முன்வரவேண்டும்

மனிதர்களால் கைவிடப்பட்டுள்ள எமது மக்களுக்கு கடவுள் ஒருவரே அடைக்கலம். இந்த நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்தும் ஆன்மீக வழியில் எம் விடிவுக்காக இறைவனை வேண்டுவோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மண்டபம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக 9

அகதிகளுக்கானஐ,நா. தூதரகத்தின் உதவியுடன் மறவன் புலோவில் அமைக்கப்பட்ட சலவைத் தொழிலாளர் இளைப்பாறும் மண்டபம் மற்றும் சலவைத் தொட்டி என்பனவற்றை உரியவர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் வைபவம் இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளைமுதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-9)

## களவாடப்பட்ட சைக்கிள் மீட்பு

வலி. கிழக்கு, ஓக. 9

களவாடப்பட்டு மீட்கப்பட்ட 10 சைக்கிள்கள் கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சைக்கிள்களை தொலைத்தவர்கள் சைக்கிள் வாங்கிய பற்றுச்சீட்டு அல்லது கடிதம் திருட்டு தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்த பிரதி என்பனவற்றுடன் நேரில் வந்து அடையாளம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என கோப்பாய்ப் பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-180)

## வன்னிச் சிறுவர்களின் உயிர்காப்புத் திட்டம்

வவுனியா, ஓக. 9

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் வசிக்கும் சிறுவர்களின் போசாக்கு மற்றும் உயிர்காப்புத் தொடர்பான புதிய திட்டம் ஒன்றை வெரித்தாஸ்வானொலியின் தமிழ்ச் சேவைப் பிரிவினர் சில தினங்களுக்கு முன்னர் வன்னியில் ஆரம்பித்துள்ளனர்.

'வன்னிச்சிறுவர் பட்டினிச். சாவுத்தவிர்ப்புத் திட்டம்' எனப் பெயர் இடப்பட்டுள்ள இந்தத்திட்டத்தின்கீழ் வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் 75 போஷாக்கு உணவு வழங்கும் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மல்லாவி, யோகபுரம் மத்தி மற்றும் யோகபுரம் மேற்கு, திருநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 200சிறுவர்களுக்கு ஒருவாரகாலத்துக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பசுப்பால்,முட்டை,உழுந்து முதலிய சத்துணவுகள் அடங்கலான போஷாக்கு உணவுகளே இவ்வாறுசிறுவர்களுக்கு வழங்கப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ஐ-7]

## சான்றிதழ் வழங்கல்

அளவெட்டி, ஓக. 9

முதலுதவி மற்றும் சுகாதாரம் சம்பந்தமான பயிற்சி பெற்று வெளியேறிய சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவைச் சேர்ந்த சுமார் 75 பேருக்கு உதவி மாவட்ட ஆணையாளர் க. அருந்தவராசா அண்மையில் சான்றிதழ்களை வழங்கினார்.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் க.சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ-13)

## வலி. வடக்கில் வாகனங்களை பதிய படையினர் அறிவுறுத்து

வலி. வடக்கு, ஓக. 9

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் பாவனையில் உள்ள சகல வாகனங்களையும் பதிவு செய்ய வேண்டுமென்று இராணுவத்தினர்ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

மோட்டார்சைக்கிள், கார், லொறி, உழவு இயந்திரம், லான்ட் மாஸ்ரர் உட்பட சகல வாகனங்களையும் தத்தம் பிரிவு கிராம சேவையாளர்களிடம் பதிய வேண்டும் என்றும் —

வாகன இயந்திர இலக்கம், வாகன இலக்கம் உட்பட ஏனைய விவரங்களைக் கொண்டதாகப் படிவம் தயாரித்து அதன் மூன்று பிரதிகளுடன் பதிவு செய்ய வேண்டும என்றும் — படையினர் அறிவுறுத்தியுள்ளனர். (இ-3-86)

## கலைஞர்களுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 9

கலாசார திணைக்களத்தினால் இந்த ஆண்டு கலாபூஷணம் விருது வழங்கப்பட்ட வலி.வடக்கைச் சேர்ந்த கலைஞர்களான எஸ். ஆர். ஞானசுந்தரம், ஏ. ரி. பொன்னுத்துரை, எல். திலகநாயகம் போல், வ. செல்லத்துரை ஆகியோரை அந்தப் பிரதேச மக்கள் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இன்று காலை 10-30 மணி முதல் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

வலி.வடக்கு பிரதேச செயலகத்திலிருந்து கலைஞர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட பின்னர் இடம்பெறும் விழாவில் பிரம்மஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள், அருட்கவி சீ. வினாசித்தம்பி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பதில் நீதிவான் மு. சயாநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர்.

பண்டிதர் க. நாகலிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் க. பீதாம்பரம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (இ-3-க)

## சுகாதார ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு

திருநெல்வேலி ஓக.9

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த வருடம் (1998) ஜூன் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு இடர்காலக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.

இக்காலப் பகுதியில் சேவையாற்றிய நிரந்தர,தற்காலிக, அமைய ஊழியர்களின் விவரங்களை உடனடியாக தமது பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளை யாழ் சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். மேற்படி இடர்காலக் கொடுப்பனவுக்கான நிதியினைவழங்குவதற்குவடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்வந்துள்ளதால் கூடிய விரைவில் இதற்கான விவரங்களை நிறுவன பொறுப்பதிகாரிகள் அனுப்பி வைக்க வேண்டும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக 9

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'தூயஒளி' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் இன்றும் நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### இன்று

★ பி. ப. 3. 30 மணி— யுத்காமல் வி. க. அணி எதிர் பொற்பதி வி. க. அணி

★ பி. ப. 4. 30 மணி — பாடும்மீன் வி. க. 'ஏ' அணி எதிர் கோண்டாவில் மத்தி வி. க. அணி

### நாளை

★ பி. ப. 3. 30 மணி — சென். அன்ரனீஸ் வி. க. 'ஏ' அணி எதிர் கொய்யாத்தோட்டம் வி. க. அணி.

★ பி. ப. 4. 30 மணி — சென். அன்ரனீஸ் வி. க. 'பி' அணி எதிர் சென். நீக்கலஸ் வி. க. அணி. (இ-3-51)

## சமய சந்நிதிகளில்

நல்லூர், ஓக. 9

நல்லூர் அருள்மிகு ஸ்ரீசட்டநாதர் ஆலய நல்லை நாயகி சமேத நல்ல நாதப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாணமும் அதனைத் தொடர்ந்து திருவீதி உலாவும் இடம்பெறும். (க-111)

★ ★ ★

சாவகச்சேரி, கச்சாய் வீதி சந்தன முதலிப்புல கந்தசாமி கோயில் மகோற்சவத்தில் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கும் தீர்த்தோற்சவம் ஆடி அமாவாசை தினமான நாளை மறுதினம் புதன்கிழமைகாலை 10 மணிக்கும் இடம்பெறும். (க-30)

## யாழ். மாவட்டத்தில் 100 சமுர்த்தி அலுவலர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்

வலி.தென்மேற்கு, ஓக. 9

யாழ். மாவட்டத்தில் மேலும் 100 சமுர்த்தி அலுவலர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான தெரிவுகளை விரைவில் யாழ். செயலகத்தில் திட்டமிடல் பிரிவினரால் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ், மாவட்டத்தில் இதுவரை நிரப்பப்படாத கிராம அலுவலர் பிரிவுகளுக்கேமேற்படி சமுர்த்தி அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

## தலித்……

(மூன்றாம் பக்கத் தொடர்)

தமிழக ராஜீவ் காங்கிரசுக்குத் தரப்படவில்லையெனில் தலித் எழில்மலை அங்கு போட்டியிடுவார் என்று ஒரு தரப்பில் கூறப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்தில் முழு அளவில் ஈடுபட உள்ளதால் இம்முறை அவர் போட்டியிடவில்லை என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிதம்பரத்தில் அவர் மீண்டும் போட்டியிட்டால் வெற்றிபெறுவது கடினம் என்று [illegible] (இ)

## தமிழில் உரையாற்ற ஜனாதிபதி ஆர்வம்

கொழும்பு, ஓக. 9

பொதுக் கூட்டங்களில் தமிழில் உரையாற்றுவதற்கு விரைவில் தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் சம்மேளனத்தின் மாநாட்டில் கலந்துரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

வடக்கு — கிழக்கில் இருந்து மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்துள்ள உங்கள் முன் தமிழில் பேச முடியாமைக்கு வருந்துகின்றேன்.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் ஆசிரியர் ஒருவரின் உதவியைக் கொண்டு அலரிமாளிகையில் தமிழ் பயின்று வருகின்றேன். சில காலங்களில் வேலைப்பளு காரணமாகச் சரியாக வகுப்புக்களில் கலந்து கொள்ள முடியாததால் தமிழ் கற்பதில் சற்றுத் தாமதமேற்பட்டுள்ளது.

— இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா வர கிளின்ரன் திட்டம்

வாஷிங்டன், ஓக. 9

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா வரத் திட்டமிட்டுள்ளார்.

இத்தகவலை தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர்கள் என். என். வோரா, ஜே. என். தீட்சித் இருவரும் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

கார்கில் போருக்குப் பின் உள்ள நிலைமை குறித்து அமெரிக்க அதிகாரிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் நோக்கில் வோராவும் தீட்சித்தும் வாஷிங்டன் சென்றுள்ளனர்.

இந்தியாவுக்கு வர கிளின்ரன் விருப்பம் கொண்டுள்ளதாகவும், அநேகமாக அடுத்த ஆண்டின் துவக்கத்தில் அவர் இந்தியா வரலாம் என்றும் அதிகாரிகள் கூறியதாக தீட்சித் தெரிவித்தார்.

என். என். வோரா, பிரதமரின் முன்னாள் முதன்மைச் செயலராக இருந்தவர். ஜே. என். தீட்சித் வெளியுறவுத் துறை முன்னாள் செயலராக இருந்தவர்.

அணு சோதனை தடை ஒப்பந்தத்தில் (சி.டி.பி.டி.) இந்தியாவை கையெழுத்திடச் செய்யும் நோக்கில் கிளின்ரன் ஏற்கனவே இந்தியா வருவதாக இருந்தது. ஆனால் முழு அளவில் இதைச் செயல்படுத்தினாலொழிய இதில் கையெழுத்திட முடியாது என்று இந்தியா உறுதியுடன் தெரிவித்துவிட்டது.

இந்நிலையில் உறவை மேலும் மேம்படுத்தும் வகையில் முன்நிபந்தனை எதுவும் இல்லாமல் இந்தியா வர கிளின்ரன் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்திய எல்லைக்கோட்டுப் பகுதியிலிருந்து பாகிஸ்தான் படைகள் வாபஸ் பெற்றால் இருநாட்டு உறவுகளைப் பலப்படுத்துவதில் தனிப்பட்ட அக்கறை செலுத்தப் போவதாக கிளின்ரன், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் கூட்டாக வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியிருந்தார்.

இந்தியா–பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் மத்தியஸ்தராகச் செயல்படும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை. பிரச்சினைகளை இரு நாடுகளும் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றே கிளின்ரன் விரும்புவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-8)

## மோதலில் உயிரிழப்பு

மன்னார் பள்ளமடுப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமதுதரப்பில் ஒருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சத்துருக்கன் அல்லது விமலன் (தோம்சன் தேவதாஸ்—வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-7)

## பிரார்த்தனை...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்த வணக்கத்துக்கு உரிய செல்வராஜா அடிகளார், வடமாகாண அமலமரித் தியாகிகள் சபையின் இயக்குநர் அருட்தந்தை ஜீவாபோல், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜெபமோகன், அருட்தந்தை ரெஜிஸ்இராஜநாயகம், தென் இந்தியத் திருச்சபை ஆயர் வண.பிதா எஸ். ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கித் தத்தமது சமயப் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர்.

நேற்றைய பிரார்த்தனையில் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்களும் பொதுமக்களும் இந்து, கிறிஸ்தவ குருமார்களும் கலந்து கொண்டனர். (இ-7-9)

## ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்)

காரணமாக 20 வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன், இரண்டு வீடுகள் தரை மட்டமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# எதிரணியை சரணடையுமாறு தலிபான் தலைவர் கோரிக்கை

காபூல், ஓக. 9

ஆப்கானிஸ்தானில் வடபகுதியில் தளபதி அசமது ஷா மசூத்தின் சட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தொடர்ந்து முன்னேறி வரும் தலிபான் படைகள் எதிரணிப்படைகளை சரணடையுமாறு தெரிவித்துள்ளது.

தலிபான் அமைப்பின் தலைவர் எதிரணிப் படைகளுக்கு பகிரங்கமாக எழுதியுள்ள கடிதத்தில் அவர்களை சரணடையுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

எமது மதத்துக்கும் நாட்டுக்கும் எதிரானவர்களாக நிற்கவேண்டாம் எனக் கோருகின்றோம்.

உங்கள் ஆயுதங்களைக் கீழே வையுங்கள். இந்தச் சண்டையில் இருந்து விலகிக் கொண்டால் உங்கள் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு உண்டு. அவ்வாறு விலகுபவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று அந்த பகிரங்கக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரணிப்படைகள் வசம் இருந்த பல முக்கிய நிலைகளை தலிபான் படையினர் கைப்பற்றியதை அடுத்து தலிபான் தலைவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (ஐ-6)

# தைவானுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் விற்பனை

## சீனா கடும் ஆட்சேபம்

பெய்ஜிங், ஓக. 9

தைவானுக்கு 10 இலட்சம் டொலர் பெறுமதியான யுத்த விமானங்கள் மற்றும் ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முயற்சிகளை மேற்கொள்வதற்குச் சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த ஆயுத வகைகளுக்குள் போர் விமானங்கள் மற்றும் எவ். 16 ரக விமான உதிரிப் பாகங்கள் என்பனவும் அடங்குகின்றன.

தைவானுக்கு ஆயுதங்கள் வழங்குவதனை நிறுத்தும்படி சீனப் பிரதி வெளிவிவகார அமைச்சர் யெங் ஜியேங் சீனாவுக்கான அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் மோரியரியைத் தனது அலுவலகத்துக்கு அழைத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னணி நிலைக்குச் சமீபமாக நிறுத்தப்படும் என்றும்—

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து செல்லும் லொறிகளில் பொருள்கள் ஏற்றப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இதற்கு வசதியாக கொக்காவில் பகுதிக்கு 12 லொறிகளை அனுப்புமாறு செஞ்சிலுவைச் சர்வதேச சக்குழு மல்லாவி வதிவிடப் பிரதிநிதி லொறி உரிமையாளர் சங்கத்தைக் கேட்டுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியா வந்து திரும்பிச் செல்ல முடியாத நிலையில் வவுனியாவில் தங்கியுள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களில் 500 பேர் இன்று அங்கு அனுப்பப்படவுள்ளனர். இதில் 22 அரசாங்க சிற்றூழியர்களும் அடங்குவர்.

வவுனியா செயலகத்தில் இருந்து பஸ் மூலம் அழைத்துச் செல்லப்படும் இவர்கள் மாங்குளத்தில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரணில் விடப்படுவர். அங்கிருந்து இவர்கள் 3 மைல் தூரம் நடந்து புலிகளின் சோதனை நிலையங்களுக்குச் செல்வர்.

நாளை முதல் 500 பேர் வீதம் தினமும் பயணிகள் அனுப்பப்படுவர்.

அதே நேரம் — இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியா மற்றும் இடங்களுக்குச் செல்ல 200 பயணிகள் இன்று இந்தப் பாதையூடாக வவுனியா வரவிருக்கின்றனர்.

பொது, நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி அரச அதிபர் எஸ். இராசநாயகமும் இன்று இந்தப் பாதையூடாக வவுனியா வருகின்றார்.

இந்த நிகழ்வுகளைப் பார்வையிட கொழும்பில் இருந்து பத்திரிகையாளர்கள் அங்கு அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர். (இ-3-164)

## கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு 68 ஆசிரியர்கள்

யாழ். பல்கலைக்கழக கல்வி டிப்ளோமாக் கற்கை நெறிக்கு 68 ஆசிரியர்கள் இந்த வருடம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ். வலய அலுவலகத்தில் நடைபெறும் என்றும் —

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை இன்று முதல் தமது அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் — யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

## நிலக்கடலை உற்பத்தி

பளைப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலைச் செய்கை பெரு வெற்றி அளித்துள்ளது.

நிலக்கடலை உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகளிடம் இருந்து பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிலக்கடலை கொள்வனவு செய்யப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (இ-117)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

யல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனும்— தொடர்பு கொண்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

அதேநேரம்— கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தமிழ்க்கட்சித் தலைவர்களைக் கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளனர். [இ-3-8]

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை — ஆகியவற்றை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப் படையினர் தீவிரமாக்கியுள்ளனர்.

தோணிக்கல் உட்பட சம்பவம் நிகழ்ந்த இடங்கள் நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன.

மாலையில் நகரில் உள்ள 36 லொட்ஜுக்கள் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதல் நடத்தப்பட்டது.

மன்னார்—வவுனியா வீதியில் அமைந்திருந்த சிறிய கடைகள் படையினரால் நேற்று அகற்றப்பட்டன.

அந்தப் பகுதியில் வீதிகளுக்கு அருகில் உள்ள மரங்கள் படையினரின் உத்தரவின் பேரில் பொதுமக்களால் வெட்டி அகற்றப்பட்டன. (இ-164-3)


## மலிவு விற்பனை

(09-08-99 முதல் 25-08-99 வரை)

இளைஞர், யுவதிகள் விரும்பும்

★ வெளிநாட்டு கிற்றோ ★ சோடி ★ கொறியன் ★ நெற் சூ ★ இந்தியன் சாண்டில்கள் ★ சிலிப்பர்கள்

மலிவு விலையிலும்

மற்றும் ★ பாட்டா ★ D. S. I. ★ சீபா ★ றன்பா சிலிப்பர்கள் ★ Jogger ★ Ozaki

மற்றும் ★ சப்பாத்து வகைகளை

குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள

"கணபதி சூ சென்ரர்"

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்) (68011)



உ

காரைநகர் மணற்காடு

## கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில் ஆடிக் குளிர்த்தி சங்காபிஷேக விஞ்ஞாபனம்

பிரமாதி வருடம் ஆடி மாதம்

28ஆம் நாள் (13-08-99) வெள்ளிக்கிழமை

ஆடிப்பூர நாள்

காலை 6.00 மணி:
விநாயகர் வழிபாடு, புண்ணியாவாசனம், யாக பூசை, காலம் – 2, தீர்த்த சங்கிரகணம்.

காலை 8.00 மணி;
மூலமூர்த்தி அம்பாள் திரவிய அபிஷேகம்

காலை 9.00 மணி:
உற்சவமூர்த்தி அம்பாள் திரவிய அபிஷேகம், விஷேட திரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை

பகல் 11.00 மணி:
அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம், உற்சவ மூர்த்திக்கு 108 சங்காபிஷேகம்

பகல் 12.00 மணி:
உச்சிக்கால விசேட பூசை, வசந்த மண்டப பூசை, உற்சவம் நிகழும்.

### சங்காபிஷேக குருமார்

பிரதம குரு:
பிரதம குரு: நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பரம்பரைப் பிரதம குரு சிவாச்சாரியமணி
சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக்குருக்கள் (நயினாதீவு)

தேவஸ்தான குரு:
சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள் (காரைநகர்)
சிவஸ்ரீ சிவ. சிவமூர்த்திக் குருக்கள் (கட்டுடை)

சர்வசாதகம்:
சிவஸ்ரீ ப. ராஜகோபால சர்மா (வடகோவை)

வணக்கம்

வை. கா. தவராசன்
(விழா உபயகாரர் சார்பில்)

மணற்காடு,
காரைநகர். (67906)



புலமைப் பரிசில் பரீட்சை 1999

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் விற்பனைக்கு உண்டு.

தயா அச்சகம் & கொம்பியூட்டர் பிறின்ட்

138, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம். (68077)



புலமைப் பரிசில் வினாத்தாள் விற்பனையாகின்றது!

நேற்று நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் Original வினாப்பத்திரம் விடையுடன்

இன்று கிடைக்குமிடங்கள்:

சயன்ஸ் அக்கடமி
யாழ்.
பூபாலசிங்கம்
றூபா அக்கடமி
பொஸ்கோ
கல்வி நிலையம்
(68058)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org